# சான்றோர் சமூகத்துச் சரித்திர நாயகன்

(3031)



தமிழ் வேட்கைப் பதிப்பகம்

சென்னை-600 041 (1990)

# சான்றோர் சமூகத்துச் சரித்திர நாயகன்

இயற்றியவர்

*வித்துவான்* ம. மாசிலாமணி கிராமணி *அவர்களின்*

*நல்லாசிபெற்ற மாணாக்கன்*

**து. பெ. கனகசபை**

**தமிழ் வேட்கைப் பதிப்பகம்**

23, அண்ணா வீதி, திருவான்மியூர்,

சென்னை-600 041.

முதற் பதிப்பு: 1990

பதிப்புரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 7-30

நூல் கிடைக்குமிடம் :

**சென்னைத் தொண்டை மண்டல சான்றோர் தரும பரிபாலன சபை**
47, கந்தசாமி கோயில் தெரு,
குயப்பேட்டை, சென்னை-600 012.




உரிமை : வித்துவான் ம. மாசிலாமணி.

# அணிந்துரை

**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்** — **திருக்குறள்**

அன்புருவான அன்னையாய், அத்தனாய், ஆசானாய் ஆருயிர்த் தோழனாய், அம்பலத்தாடியின் பேரருளாய் எனக்கு வாய்க்கப்பெற்றவர் தவத்திரு ம. மாசிலாமணி அவர்கள் ஆவார். அப்பெரியாரின் வாழ்க்கை வரலாறு வாழ்வாங்கு வாழ விழையும் மன்பதைகட்குக் கலங்கரை விளக்கம் போல்வது; எய்ப்பினில் வைப்பாவது. இருமைப் பயன்களையும் ஈயவல்லது.

இத்தகைய நல்லாரின் குணங்களை உரைப்பதுவே தனக்கு கிடைத்த நற்பேறு எனக்கருதி, அன்னாரின் வாழ்க்கை வரலாற்றினை எழுத முன்வந்து எழுதி இனிதாக முடித்தவர் திரு து. பெ. கனகசபை என்னும் நன்மாணாக்கர் ஆவார். தவத்திரு ம. மாசிலாமணியார் அவர்களிடம் மாணாக்கர் பலர் கல்வி பயின்று வாழ்க்கைத் துறையில் மேனிலைக்கு வந்தவர் - இன்னும் இருப்பவர் ஆயினும் அவர்கள் எவர்க்கும் கிட்டாத பேறு திரு. து. பெ. கனகசபை அவர்கட்குக் கிட்டியது பாராட்டத்தக்கது. அவரும் தம் ஆசிரியர் வரலாற்றினை அவர் இனிய வாய் மொழி கேட்டுப் பல நிழ்ச்சிகளை விடாமல் எழுத முயன்றிருக்கிறார். ஆனாலும், ''அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்தும் சால்பு உன்றிய தூண்'' என்னும் குறட்பாவிற்கு இலக்கியமாக விளங்கும் ஆசிரியர் தான் கூறுதற்கு! நாணித் தன் மாணாக்கர் மாட்டுக் கூறாமல் விட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு சுட்டிக் காட்ட விழைகிறேன். 1970-71ஆம் ஆண்டில் கோடம்பாக்கத்தில் வாங்கிய மனையில் ஒரு சிறு வீடு கட்டத் தொடங்கினேன்; அதே ஆண்டில் என் மூத்த மகன் பொன்னம்பலவாணன் என்னும் பெயரோன் ம. மாசிலாமணி அவர்களால் உத்தியோக உதவி பெறப் பெற்றவன். அம்மகனுக்குத் திருமணமும் உறுதி செய்யப்பட்டுவிட்டது. எனக்குப் பணமுடைமிகுதியால் மனவேதனை அதிகமாகிவிட்டது.

என் ஆருயிர் நண்பர் மாசிலாமணியார் அவர்களிடமும் பணம் இல்லை என்று எனக்குத் தெரியும், அதனால் அவரிடம் கேட்கவில்லை.

**''ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோடு ஒப்பக் கொளல்''**

என்னும் தமிழ் மறைக்கு ஏற்ப ஆசிரியர் என்னிலை உணர்ந்து அஞ்ச வேண்டாம் என்று ஆறுதல் அளித்தார். தன் வீட்டைச் சிந்தாரிப்பேட்டை கோவாப்பரேடிவ் பேங்கில் ஈடுகாட்டிப் பணம் பெற்று பெருந்தொகை அளித்து அருந்துயர் போக்கினார்.

உற்றார், உறவினர், மாணவர், நண்பர் முதலானோர் அன்புமிகு ஆசிரியரிடம் உதவிகள் பல பெற்றனர். கடனாகப் பெற்றவர்களில் பலர் திருப்பி தந்திலர். ஆனால் ஆசிரியர் மாசிலாமணியார்கடன் பெற்றவர்களின் துயரநிலைக்கு வருந்துவாரே தவிரக் கடிந்து கேட்க மாட்டார்.

திரு. து. பெ. கனகசபை அவர்கள் ஆசிரியர் ம. மாசிலாமணியார் அவர்களின் மழலை மிழற்றும் குழந்தைப் பருவம் கழிந்து பள்ளிப் பருவம் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை. சான்றோர் குலத்துச் சான்றோரான மாசிலாமணியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அருள்மிகு ஆசிரியர் அவர்களிடமே கேட்டும், நேரில்கண்டும் ஆர்வத்துடன் எழுதி உள்ளமை பாராட்டத்தக்கது.

ஆசிரியர், மூதறிஞர் திரு. மாசிலாமணியார், நூலாசிரியர், உரையாசிரியர், போதக ஆசிரியர் ஆக விளங்கி வருகின்ற நிலையை து. பெ. கனகசபை பல எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.

மீனாட்சி அம்மை கலிவெண்பா, கச்சியப்ப முனிவர் இயற்றிய விநாயக புராணம், கந்தர் சஷ்டி கவசம் முதலிய வற்றிற்கு எல்லாம் தெளிவுரை ஆக்கியுள்ளார். சில சொற்களுக்குத் தெளிவான பொருள் தோன்றாத போது ஆழ்ந்த சிந்தனை செய்து உண்மையான பொருளைக்கண்டு மகிழ்வார். என்போன்ற நண்பர்களிடமும்கூறி மகிழ்வார். எடுத்துக்காட்டாக கந்தர் சஷ்டி கவசத்தில், எடுத்த எடுப்பில் ''சஷ்டியை நோக்கச் சரவணபவனார்'' என்று வருகிறது. அடுத்த அடியின் சொற்பொருளுடன் அது பொருந்துவதாக இல்லை.

''சஷ்டியை நோக்க'' என்னும் தொடரில், 'நோக்க' என்று வரும் சொல் ''நோற்க'' என்று இருத்தல் வேண்டும்; சஷ்டி விரதம் இருப்பதனால், சிட்டருககு (விரதம் அனுட்டிக்கும் மேலோர்க்கு) உதவி செய்கின்ற செங்கதிர் வேலோன்' என்னும் பொருள் சிறந்து விளங்குவதைக் காணவாம். 'நோக்க' என்னும் சொல் பொருந்தாமையும் காணலாம்.

மகாவித்துவான் மாகதேவ முதலியாரிடம் இலக்கிய இலக்கணங்களைக் கசடறக் கற்ற திரு. மாசிலாமணியார், பன்மொழிப் புலவர் தெ. பொ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் வித்துவான் இறுதித் தேர்வுக்கான நூல்களை எல்லாம் இனிதே கற்றுந் தெளிந்தார். ஓவியத்திலும் திறன் காண விழைந்து எழுமூர் சித்திர வித்யாசாலையில் சேர்ந்து பயின்ற போது, அங்கு மேலோங்கி நின்ற இன வெறியை ஒழிக்கவும் பணியாற்றினார்.

புளியங் கொட்டையிலும், கொட்டைப் பாக்கிலும் விநாயகர் உருவத்தை செதுக்கி ஆக்கி அனைவரையும் வியப்பிலாழ்த்தினார்.

''வல்லவன் ஒருவன் வாழ வாழும் தன் கிளையும் அன்றே'' என்பதனால், தொண்டை மண்டல சான்றோர் தரும பரிபாலன சபையில் திரு. மாசிலாமணியார் சேர்ந்து, இந்தத் தள்ளாத வயதிலும் தன்னிகரில்லாதத் தலைவராயிருந்து பணியாற்றி வருதலை திரு. து. பெ. கனகசபை அவர்கள் இந்த வரலாற்றில் விளக்கியுள்ளார்.

சித்திரக் கவிகள் பல இயற்றிய சரித்திர நாயகர், வித்தாரக் கவியான அகலக்கவியும் ஆக்கும் ஆற்றலும் திட்ப அறிவும் பெற்றவர் என்பதை, அவர் இயற்றிய பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மன் வரலாற்றுச் செய்யுள் பகுதியே சான்றாகும் அது 2310 அடிகளைக் கொண்டது என்பதனைத் திரு. து. பெ. கனகசபை இதில் எடுத்துக் காட்டியுள்ளார்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய தெய்வத் தமிழ்த் திருவள்ளுவர் தம் மனைவி வாசுகி அம்மையுடன் நல்லறமாம் இல்லறத்தை நடத்தியது போலப் பேராசிரியர் ம. மாசிலாமணியார் ஆருயிர் மனைவி, விருந்து புரதரும் அருந்தவச்செல்வி நாகேஸ்வரி அம்மையுடன் இனிதாக இல்லறம் நடத்தி வருகிறார்.

இவர்கள் அன்பு வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டு எடுத்துக்காட்ட விழைகிறேன்.

ஆசிரியர் தம் வாழ்க்கைத் துணைவியாருக்குக் கால் ஊனமுற்று நடக்க இயலவில்லை. அந்நிலையில் மூதறிஞர், செவிலியர் பணி அனைத்தையும் சலிப்பின்றித் தாமே செய்தார். அவர் தம் துணைவியாருக்குச் செய்த அன்புப் பணி கண்டவர் கண்களில் நீர் திரையிடச் செய்தது.

பொய் கண்டார் காணாத போதம் எனும் அத்துவித மெய்க்கண்டார் திருவடிகளைப் போற்றிச் சைவசித் தாந்தமே தலையாய சித்தாந்தம் என்னும் மேலான கொள்கையுடையவர். அதனால்,

**குனித்த புருவமும்,**
**கொவ்வைச் செவ்வாயில்,**
**குமிழ் சிரிப்பும்,**
**பனித்த சடையும்,**
**பவளம் போல் மேனியும்,**
**பால் வெண்ணீறும்,**
**இனித்த முடைய எடுத்த**
**பொற்பாதமும்**

ஆகிய அருள் வெளியில் தவத்திரு. ம. மாசிலாமணியார் உள்ளம் தோய்ந்து திளைக்கும் பேறு பெற்றது. அன்னார் திருவடி எங்கட்கு அரண் ஆகுக.

செயற்கரும் செயலாற்றி வரும் நல்லாசிரியரான ம. மாசிலாமணி கிராமணியாரின் வாழ்க்கை வரலாற்றினை அவர் வாய்வழி கேட்டும் பார்த்தும் வரும் து பெ. கனகசபை அவர்களின் நற்பணி பாராட்டிற்கு உரியது.

இளமை வயதினைக் கடந்த அவர் மாணாக்கராகித் தண்டமிழின் சுவை கண்டு ஆசிரியரின் அருளாசி பெற்றுப் பெற்றதற்குரிய பண்பும் அன்பும் கொண்டு தம்மருமை ஆசிரியர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிட்டமை பாராட்டுக்குரியது. திரு. து. பெ. கனக சபை அவர்கள் என்றும் நன் மாணாக்கராகவே இருந்து எல்லா நலன்களையும் பெற்று இனிதே வாழ்வாராக என்று தோன்றாத் துணையான பொன்னம்பலவாணனை வேண்டிக் கொள்வன்

**வித்துவான் : ரா. சக்கரபாணி நாயக்கர்**

# முகவுரை

ஒரு நூலுக்கு முகம் போலமைவது முகவுரை என்பர். நூலில் உள்ளதைச் சுருக்கி, தகவுற இயற்றல் முகவுரையாகும். இம் முகவுரை இயம்பும் இனிய நிகழ்ச்சிகள், என் ஆசான் வாழ்க்கையின் அற்புதங் கூறும்.

நன்னெறி சார்ந்த வாழ்க்கைக்கு வித்தூன்றப்படுவது இளமைப் பருவம். பலருக்கு அது பெற்றோரால் அமையும்; வாழ்வாங்கு வாழப் பிறந்த பெரியோர்க்கு மட்டுமே அஃது இயல்பாக அமையும். அந்நிலை வாய்க்கப் பெற்றவர் ஐயா (என் ஆசான்) அவர்கள்.

ஆம்! இளமையிலேயே இயல்பாக அமைந்த அருங் குணங்கள்தாம், அவரை வாழ்வாங்கு வாழும் பெரியாராக உயர்த்தியது.

குடும்பத்து பெரியவர்கள், ''ஆங்கிலம் கற்றால்தான் வாழ்வில் உயர முடியும்'' என்ற நம்பிக்கையைப் பெற்றிருந்த போது, ''தாய் மொழியான தமிழால் உயராதவன் பிற மொழியின் தயவால் மட்டும் எப்படி உயரமுடியும்?'' என்று அன்று சிந்தித்ததன் விளைவும், தமிழ் மீது அவர் கொண்ட வேட்கையுந்தான் பன்னூல் அறிந்த செந்தமிழ்ப் புலவராக நமக்கு அளித்திருக்கிறது.

வாழ்வூதியத்திற்கு தொழிலொன்று வேண்டும்; எப்பணி ஏற்பதென எல்லாரும் முடிவு செய்தபோது, ''அறிவுச் சுடரேற்றும் ஆசிரியப் பணியே தமக்கேற்றதென தேர்ந்தெடுத்து அத்துறையில் தனிச் சிறப்போடு சேவைச் செய்த பாங்கு, அவருக்கேயுரிய அருங்குணத்தின் பிரதிபலிப்பு.

நல்லவராக இருந்தால் மட்டும் போதாது. வல்லவராகவும் இருக்கவேண்டும் எனக்கருதி சிலம்பம் கற்றார். இதனால் அவர்மீது கொண்ட மதிப்பீடும், அச்சமும் கொலைவெறியர்கள் கூட, அஞ்சி ஒதுங்கும் நிலையை ஏற்படுத்தியது! சிலம்பம் கற்றதன் பயனே, சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் அரசியல் பிரவேச ஆரம்ப காலத்தில் அவர்தம் உயிர்காக்கவும் உறுதுணையாய் நின்றது.

இனவெறியற்ற சமூகத் தொண்டாற்றும் ஐயா அவர்கள் எல்லாருக்கும் நன்மை செய்ய வேண்டும் எனும் பெருநோக்கு கொண்டவர். ''நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய் வாழ்ந்து வரும் ஐயா அவர்களின் வாழ்வியல் சிறப்பைக் கூறுகிறது இந்நூல்.

ஜொலிக்கும் நவரத்தினங்களை இட்டு நிரப்பிய பொற் குடம் போன்று பொலிவது ஐயா அவர்களின் வாழ்க்கைச் சரிதம். அந்தப் பொற்குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்க்கும் விழைவே இந்நூல் இயற்றியதன் நோக்கம்.

இந்நூல் பற்றி கருத்து வழங்குமாறு ஐயா அவர்களின் ஆருயிர் நண்பர் தமிழ்ப்புலமை மிக்க பெரியவர் வித்துவான் ர. சக்கரபாணி நாயகர் அவர்களை அணுகியபோது நூலை முற்றிலும் படித்து, குறிப்பெடுத்து, இன்னும் சேர்க்க வேண்டியதை மட்டும் சுட்டிக்காட்டி, குறையொன்றும் கூறாது பாராட்டியதோடு, என் நலமார்ந்த வாழ்வுக்கு பொன்னம்பல வாணன் அருள்செய்ய வேண்டும் என வேண்டி வாழ்த்தியிருக்கிறார். பெரியவர்களின் மனம் எவ்வளவு மேன்மை நிறைந்தது என நிரூபிக்கிறது அவர் தம் பாராட்டும் இறைவனை வேண்டி வாழ்த்திய இயல்பும்.

அமிழ்தினும் ஆற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவியக் கூழ்

என்னும் குறளுக்கொப்ப என் முயற்சியை பாராட்டி, அணிந்துரை யளித்து, வாழ்த்திய பெரியவர் வித்துவான் ர. சக்கரபாணி நாயகர் அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு என் சிரம் தாழ்த்திய வணக்கம் என்றென்றும் உரித்தானது.

இந்நூலின் சபை சார்ந்த தகவல்களில் சட்ட நுணுக்கமான பகுதிகளை உடனுக்குடன் சரிபார்த்துதவிய என் மதிப்புக்குரிய மைத்துனர் திரு. D. மாணிக்கவேலு B. Com., L. L. B., அவர்களுக்கு என் நன்றிகலந்த பாராட்டும், வணக்கமும் என்றென்றும் உரித்தானது.

இந்நூலை சிறப்புடன் அச்சிட்டுத் தந்த ''முத்தமிழ் அரசி'' அச்சக உரிமையாளர் திரு. C. உமாபதி அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் என்றென்றும் உரித்தாக்க கடமைப்பட்டுள்ளேன். எத்தனை முறை பிழை திருத்தினாலும் முகங்கோணாத அவரது சிறப்புப் பணி என்றென்றும் போற்றத்தக்கது.

இந்நூலின் முகப்பு அட்டையை மிகச்சிறந்த முறையில் எழிலுடன் அச்சிட்டுத் தந்த என் ஆருயிர் நண்பர் 'ஓம் பிரிண்டிங் ஒர்க்ஸ்' உரிமையாளர் திரு. R. V. கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கு, என் அன்பு கலந்த நன்றியும், பாராட்டு தலும் என்றும் உரித்தானது.

தமிழ்ப் பெரியாரின் சிறந்த வாழ்வியலை விளக்கும் இந்நூலுக்கு தமிழ் வாழும் நெஞ்சங்களும், சுற்றமும் நட்பும் விழைவுடன் வரவேற்று ஆதரவு நல்குமென நம்புகிறேன்.

வணக்கம்

அன்புள்ள

**து. பெ. கனகசபை**

## சமர்ப்பணம்

அன்பு முகம் காட்டி, அமுதத் தமிழூட்டி,
இன்பச் சுவையூற்றாம் இலக்கிய நலம் ஈந்த
என் ஆசான் அவர்களுக்கு
இந் நூலைக் காணிக்கை யாக்குகிறேன்.

## ஈசனின் பெருமை

★

கூர்த்த மெய் ஞானத்தால்
    கொண்டு உணர்வார் தம் கருத்தில்
நோக்கரிய நோக்கே
    நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும்
    புணர்வு மிலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே!
    காண்பரிய பேர் ஒளியே!

—திருவாசகம்

# சமூகத் தோன்றலின் சிறப்பு!

★

சான்றோர் சமூகத்து, சரித்திரத்தில் வாழும் இவர்,...

சிவமே தவமென்று சிந்திக்கும் சிவனடியார். தொன்மை நலம் சேர்க்கும் வயது தொண்ணூறை தாண்டியவர்.

ஆழ்ந்த ஞானம் பெற்றவர்; அனுபவத்தில் மூத்தவர்; ஆன்றோர் பலரின் நட்புக்குரியவர்; ஆசிரியராக முப்பத்திரண்டு ஆண்டுகள் பணியாற்றியவர்; பிறர் துன்பம் காணச் சகியாப் பெருந்தகையாளர்; ஓவியங் கற்றவர்; செந்தமிழ் வித்தகர்

பிறந்த சமூகத்தின் சிறந்த வரலாற்றினை இயற்றியவர்; சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபையின் தலைவர்; இன்னும் பல சிறப்புகளுக்கு உரிய மூதறிஞர்; அமுதத் தமிழை அள்ளித்தந்த வள்ளல்.

எனது ஆசான், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களின் இலட்சிய வாழ்க்கையின் தொகுப்பு; சான்றோர் சமூகத்து சரித்திர நாயகனின் சிறப்பு அறியும் படைப்பு.

இதனை நம் சமூகத்தினர் படித்துப் பயன் பெற வேண்டும் என்பது என் விருப்பு.

மாணாக்கன்

து. பெ. கனகசபை

# சான்றோர் சமூகத்து சரித்திர நாயகன்

★

## தோற்றம்

தொன்மை மணங்கமழும் தொண்டை மண்டலப் பகுதிகளில் சான்றோர் சமூகத்தினர் வாழ்ந்த நாடுகள் மூன்று. அவை முகையூர், நாவலூர், தண்டையார்ப்பேட்டை என்பன. அவற்றுள் தண்டையார்ப்பேட்டை என்பது, பட்டினத்தின் நாகரிகத்தையும், கிராமத்தின் வனப்பையும் வளத்தையும் ஒருங்கே பெற்று, கடற்கரையருகே அமைந்த பகுதி.

கும்பிட்டுத் தொழுவோர்க்கு அம்பிகையின் ஆலயம் ஒன்று அப்பகுதியின் ஒரு வீதியில் அமைந்திருக்கிறது. அந்த வீதிக்குப் பெயர்தான் கும்பாலம்மன் கோயில் தெரு என்பது. அந்தக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில், தெருவுக்கு மேற்குத் திசையில் 64-ஆம் எண்ணுள்ள ஒருவீடு அமைந்திருக்கிறது. அதுதான் திரு வேதாசல கிராமணியார் திருமதி ஆண்டாள் அம்மையார் என்னும் தம்பதியர் வாழ்ந்த இல்லம்.

சோதிடக் கணிப்பின்படி, காக்கையர் நாடியில், ‘‘தந்தை பேர் வேதாசலமே, தாய் பேர் ஆண்டாள்’’ என்கிறது.

வங்கக் கடலைத் தொடும் கீழ்வானத்தில் தங்கச் சுடர் பரப்பும் செங்கதிரோன், பகல் போதில் பயணத்தைத் தொடங்கும்போது இதமான வெப்பத்தை வழங்கும். குளிர்

பெற்று நடுங்கும் உடல்களுக்குப் போர்வை தந்ததுபோல சுகமான உணர்வு தோன்றும். இன்பம், துன்பம் என்பன வாழ்வில் மாறி மாறி வரும் அனுபவங்கள். இதை உணர்த்து வதுபோல்,வெய்யோனின் பயணவேகம் அதிகரிக்கும்போது வெப்பமும் அதிகரிக்கும். தரையில் செருப்பின்றி நடக்கும் காலும் கொப்பளிக்கும். இதை மாற்றியமைக்கும் சக்தி சில இடங்களுக்கு உண்டு. கோடைக் காலங்களில் அவ்விடங்க ளெல்லாம் பூலோக சொர்க்கங்களாகவே திகழும்.

கொத்து கொத்தாக இளநீர்க் குலைகளை தலையில் சுமந்து நிற்கும் தென்னை மரங்களின் உச்சியில் நீண்டு வளர்ந்து தொங்கும் ஓலைகள், வெய்யோனின் கொடிய வெப்பத்தைத் தாங்கி, நிலமகளுக்கு நிழற்பந்தல் போட்டது போலிருக்கும் அவ்விடங்கள்.

வெப்பம் தணிப்பதற்கு நிழல்தந்து, இதமான காற்று தந்து, உடற்சூடு தணிவதற்குச் சுவையான இளநீர் தந்து, ஆண்டவனை வழிபட. மக்கள் உணவுப் பொருள்களுள் ஒன்றான தேங்காயைத்தந்து, எளிய குடில்களுக்கும், விழாக் களுக்கும் ஓலைகளைத் தந்து, இதுபோன்ற இன்னும் எத்துணை எத்துணையோ பலன்களைத் தரும் தென்னை மரங்கள் மனிதன் தேவைகளை நிறைவேற்றி வாழ்வளிக் கும் கற்பகத்தருக்கள் என்பதை நாம் மறக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

''நன்றி மறவா நல்லோர்க்குச் சான்றாக விளங்குவது தென்னை மரங்களே'' என்று அன்றே கவிபுனைந்தார் அருந்தமிழ்ப்புலவர்.

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லன்னன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

இப்படிப்பட்ட தென்னை மரங்கள் சூழ்ந்திருக்கும் இடங்களைத்தான் தென்னந்தோப்புகள் என்று சொல்லு வார்கள். தென்னை மரங்களைத் தோப்புகளாக வளர்த்த பெருமை சான்றோர் சமூகத்தினருக்கு உண்டு என்பது மட்டுமல்ல, தென்னந் தோப்புகளிருந்த இடங்களிலெல்லாம் இவர்கள் வாழ்ந்தார்கள் என்பது உண்மையுங்கூட.

''தனி மரம் தோப்பாகாது'' என்ற முதுமொழிக்குச் சான்றாக வாழ்ந்தவர்கள் சான்றோர்.

இவர்களுடைய சீரியமுயற்சியினால் முன்னோர்கள் ஏற்படுத்திய தருமசொத்துக்களையும் அதைச் சார்ந்த நடைமுறைகளையும் கட்டிக்காத்து பரிபாலஞ் செய் யவும், வர்த்தகம், மரபு ஒழுக்கம் போன்றவற்றைப் பராமரிக்கவும், அவர்கள் தம் மரபார் பதி புண்ணியத்தை யும், பசு புண்ணியத்தையும் அடைய நிலைக்களமாகத் தோன்றியதுதான், ''சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபை.''

வருங்காலத்தில் இந்தச் சபைக்கே தலைவராகவும், சமூகவரலாற்றை இயற்றித்தரும் நூலாசிரியராகவும், செந் தமிழில் புலமைப்பெற்ற வித்துவானாகவும், அமுதத் தமிழை எல்லோருக்கும் அள்ளித்தரும் வள்ளலாகவும்; பல மாணவர் களை உருவாக்கிய ஆசானாகவும், சிவனையே வணங்கும் ஏகதேச வழிபாடுடைய தவஞானியாகவும் விளங்கவரும் தவப் புதல்வரையே தாம் ஈன்றெடுக்கப்போகிறோம் என்ற உண்மை அன்றே திரு. வேதாசலம் - திருமதி ஆண்டாள் தம்பதியருக்கு எப்படித் தெரிந்திருக்கமுடியும்?

இஃது இறைவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என்பதற்கொப்ப கணித்துப் படைக்கும் கருணாமூர்த்தி யல்லவா இறைவன். அவன் படைப்பின் தத்துவத்தை முற்றுமுணர்ந்தோர் யாருளர்?

ஆம்! இறைவனிடும் கட்டளையைக் காலம் ஆற்றுகிறது; அதை இஞ்ஞாலம் ஏற்கிறது.

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

என்ற குறை நீங்கிய பாக்கியத்தைப் பெ'ற்றது அந்த இல்லம். வேதாசல கிராமணியார் ஆண்டாள் அம்மையார் தம்பதியருக்கு ஆண் குழந்தை பிறந்த நிகழ்ச்சி உறவின-ரிடையே இனிப்பு செய்தியாகப் பரவியது. அந்தக் குடும்பத் தார்க்கோ, அது எல்லையற்ற மகிழ்ச்சி தரும் இன்பத் திருநாள். முன்னே தவமிருந்து முந்நூறு நாள் சுமந்த அன்னைக்கோ, புனர் ஜென்மத்தில் அற்புதப் பேற்றை யடைந்த பேருவப்பு; தந்தைக்கோ, எந்தச் செல்வமும் இந்தச் செல்வத்திற்கீடாகாது என்ற பெருமிதம்.

பிறந்த நாள் பார்த்து, சிறந்த பெயர் சூட்ட காலத்தை கணித்தபோது, சுமார் (ஆங்கிலம் 1893-ஆம் ஆண்டு) மகர நக்ஷத்திரம் என்ற விவரப்படி 'மா' என்ற எழுத்தை தொடர்ந்து வரும் பெயரே சிறப்பானது என்றறிந்து 'மாசிலாமணி' என பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

அந்தக் குடும்பத்தில் எல்லாருடைய உள்ளத்திலும் அன்பின் ஆட்சி செலுத்தியவர், மழலை மிழற்றும் பருவத் தில் மாசிலாமணி. வளர்ந்து பெரியவரானபோதும் தனக்குப் பிறகு தங்கைகள் இருவர் பிறந்தபோதும்கூட அவர்தான் அந்த வீட்டின் செல்லப் பிள்ளை.

அன்புத் தொல்லை தரும் பிள்ளைகளை ஐந்து வயதில் பள்ளியில் சேர்க்கவே விரும்புவர் எல்லாரும். அவ்வாறே

தன் மகனை பள்ளியில் சேர்க்கப் பெற்றோர் விரும்பியதும் காலத்தின் சிறப்பை அவர்கள் எவ்வளவு கண்ணாக போற்றினர் என்பது விளங்கும்.

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

என்ற திருக்குறளின் தத்துவத்தோடு மகனின் ஒளி மயமான எதிர்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் உயர்ந்த நோக்கல்லவா அது.

★

## கல்வி

மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் மேன்மையுற்று விளங்க அடிப்படையாய் அமைவது கல்வி. படிப்படியாக மனத்தில் அமர்ந்து சிறப்பு காணுவதால், அதற்குப் படிப்பு என்று மற்றொரு பெயரும் உண்டு. 'கல்' என்னும் சொல்லுக்கு 'தோண்டு' என்பது பொருள். எதைத் தோண்டுவது? விடை தருகிறது, விகுதியில் நிற்கும் 'வி' என்ற எழுத்து. ஆம்! 'வி' என்ற எழுத்துக்கு விளக்கமாக அமைவது அழகு. 'அழகு' என்ற சொல்லுக்கு சிறப்பு என்று மற்றொரு பொருளும் உண்டு. அத்தகு சிறப்பு என்னும் புதையலைத் தோண்டி எடுத்து மகிழ்வெய்த அறிவால் அகழ்ந்தெடுக்கும் அற்புதந்தான் கல்வி. இவை யனைத்தும் இரத்தினச் சுருக்கமாக,

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

என்னும் குறள்மூலம் விளக்குகிறார் வள்ளுவர்.

மண்ணைத் தோண்டத் தோண்ட ஊற்று பெருக் கெடுக்கும் கிணறுபோன்று, கற்க கற்க கல்வியினால் நாம்

பெறும் பக்குவத்திற்கேற்ப மனக் கேணியிலிருந்து அறிவு ஊற்றெடுக்கும் என்பதுதானே அதன் பொருள். இத்தகு கல்வியினுல் பெறப்படும் அறிவு மகத்தான அற்புதத்தை இந்த மண்ணில் வாழும் மாந்தர்க்கு படைத்தளிக்கிறது.

சட்டம், சரித்திரம், மருத்துவம், விஞ்ஞானம், கதை, கவிதை, புதினம், காப்பியம், உரை நூல், திறனாய்வு போன்று அனைத்தையும் படைக்கும் ஆற்றல் மிக்கது கல்வி.

மேற்கூறிய அனைத்திற்கும் மேலாக உலகைப்படைத்து ஆண்டவனின் ஒப்பற்ற மகத்துவத்தை உணர்த்துவதும் கல்வி.

இதைத்தான் திருவள்ளுவர், ''கற்றதனுலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவது'' என்கிருர்.

இத்தகு சிறப்புமிகு கல்வியை உற்ற வயதிலேயே தம் மகன் பெறவேண்டும் என பெற்றோர் நினைத்ததும் குடும்பப் பெரியோர்கள் அதற்கு சம்மதம் அளித்ததும் பொருத்தமாக இருந்தாலும் எங்கே சேர்ப்பது என்பதில்தான் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் மாறுபாடு இருந்தது. பெரிய பள்ளிகளில் சேர்க்கவேண்டும் என்றால், மிக்க தொலைவிலுள்ள நார்த் மெட்ராஸ் ஹிண்டு ஸ்கூல் என்று அழைக்கப்படும் பள்ளியைத் தவிற வேறு பள்ளி கிடையாது.

''ஐந்து வயது பிள்ளையாயிருக்கும் மாசிலாமணியை அவ்வளவு தூரத்துக்கு அனுப்புவதா கூடவே கூடாது; கூப்பிடு தூரத்திலுள்ள ஒரு திண்ணைப்பள்ளியில் சேர்ப்பது'' என்ற முடிவுக்கு வந்தனர்.

நல்ல நாள் பார்த்து பெரியோர்களின் ஆசிபெற்று அவர் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஆம்! அது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம்; ஆசிரியர் பண்டார வாத்தியார். சுவடி: ஓலைச் சுவடி.

திண்ணைப் பள்ளிக்கூடம் என்பது அவ்வளவு அலட்சிய மாக மதிப்பிடக்கூடிய இடமல்ல. கல்வியைக் கற்றுக்கொடுப் பதிலும், பண்பை வளர்ப்பதிலும் தொன்மைச் சிறப்போடு தொண்டாற்றிவரும் உயர்ந்த அறிவாலயம் என்றும் அதைச் சொல்லலாம்.

ஆசான் அங்கே தெய்வமாகக் கருதப்பட்டார். பணிந்து, நயந்து, பவ்வியமாக பாடங்கேட்கும் சீலத்தின் சிறப்பு, ஒவ்வொருவரிடமும் பளிச்சிட்டது. அங்கு கற்பவர்களெல் லாம் ஏகலைவன்களாக இல்லாவிட்டாலும், 'எழுத்தறிவித் தவன் இறைவன் ஆகும்' என்ற பொன்மொழியை ஏற்றுக் கொண்ட மாணவ மணிகளாகவே விளங்கினர்.

எழுத்தறிவித்தல், சொல்லறிவித்தல், நூலறிவித்தல் என்னும் பரிமாணத்திற்கேற்ப கல்வி கற்பிக்கப்பட்டது. அது மாணவர்கள் உள்ளத்திலே கல்வியைப் புகுத்துவதற்குச் சிறந்த உத்தியாகவும் அமைந்திருந்தது.

"உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய் யெழுத்துக்கள்" என்ற வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாக அளிக்கப்படும் பயிற்சிக்கு எழுத்தறிவித்தல் எனப்படும். "அ, அரி, அரண், அரசன், அரண்மனை" என ஒவ்வொரு எழுத்தாக சேர்த்து சேர்த்து பயிற்றுவிக்கும் முறையைத் தான் 'சொல்லறிவித்தல் அல்லது வரிக்காப் பாடம்' என்று சொல்லுவார்கள்.

இவ்விரு நிலைகளிலும் நிறைவுபெற்றபிறகே "ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, அறப்பளீச்சுர சதகம், விவேகசிந்தாமணி" போன்ற நூல் களும், பேரிலக்கியங்களும் கற்பிக்கப்படும். இதைத்தான் நூலறிவித்தல் அல்லது நூற்பயிற்சி என்றும் சொல்லுவார்கள்.

அதுமட்டுமா? தொன்மைச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய அளவை முறைகள், "எண்ணல்,

முகத்தல், பெய்தல், நிறுத்தல், நீட்டல், தெரித்தல், சார்த்தல்'' என ஏழு வகைகள் கணிதவியலில் இருந்தன.

எண்களால் கணக்கிடும் முறைக்கு எண்ணல் என்றும், அளவைக்கலம் கொண்டு பால், தயிர், மோர், எண்ணெய் போன்றவற்றை முகந்தளக்கும் முறைக்கு முகத்தல் என்றும்; தானிய வகைகளை அளவைகளில் கோபுரம்போல் கூட்டி பெய்து அளக்கும் முறைக்கு பெய்தல்என்றும்; நீளம்-அகலம் உயரம், எல்லைகள் போன்றவற்றை சாண், முழம் என நீட்டி அளக்கும் முறைக்கு நீட்டல் என்றும்; காலத்தை நொடி, நாழிகை, யாமம், பொழுது, நாள் என கணக்கிடும் முறைக்கு தெரித்தல் என்றும்; ஒலி, சுருதி, நிறம், உருவம் இவற்றை மற்றொரு பொருளோடு சார்த்தி ஒப்பிடும் முறைக்கு சார்த்தல் என்றும் கணிதவியலிருந்ததாகவும் அதன் பெருமையினை உணர்ந்த பெரியோர்கள் கூறுகின்றனர்.

மற்றும், எண்களிலே பின்னங்களை முன்னோர்கள் நுட்பமாக கையாண்டுள்ள முறைகளும் நம்மை மிகவும் வியப்பில் ஆழ்த்துகின்றன. 1/320 முந்திரி என்றும், 1/80 காணி என்றும், 1/20 மா என்றும், 1/16 வீசம் என்றும், மற்றும் அரைவீசம், கால்வீசம், அரைமா, அரைகாணி என்றும் பின்ன அளவுகள் வழங்கப்பட்டிருந்தன.

தொகைகளுக்கும் சில சிறப்புபெயர்கள் அன்று வழக்கிலிருந்ததாகவும் அறிகிறோம். பத்தாயிரத்தை (10,000) அயுதம் என்றும், லட்சத்தை நியுதம் என்றும், பத்து நூறாயிரத்தை அல்லது மில்லியன்என்கிற பத்து லட்சத்தை பிரயுதம் என்றும், நூறு லட்சத்தைக் கோடி என்றும், கோடிக்கு மேலே அற்புதம், நிகர்ப்புதம், கும்பம், கணம், கற்பம், நிகற்பம் என்றெல்லாம் பெயர்கள் வழக்கிலிருந்து அன்றைய கணிதவியலுக்கு அணி செய்தன என்றும் பெரியோர்கள் மூலமாக அறிகிறோம்.

இன்னும் இது போன்ற தொன்மைச் சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். அத்தகு சிறப்பு மிகு கல்வியைப் பயிற்றுவிக்கும் அறிவாலயங்களுள் ஒன்றாகத் திகழ்ந்த திண்ணைப் பள்ளிக்கூடம், மாணவராயிருந்த மாசிலாமணி அவர்களுக்கு நலமிகும் கல்வியை அளித்தது என்றாலும் அவருடைய குடும்பத்தினருக்கு மற்றுமோர் குறையுமிருந்தது.

நான்கு கோண(ல்) எழுத்தைத் தெரிந்துகொண்டால் நலமாயிருக்கும் என்பது தான் அது. 'கோண எழுத்து' என்பது ஆங்கில எழுத்துகளுக்கு நம் முன்னோர்கள் இட்ட சிறப்புப் பெயர்.

சட்டங்கள் இயற்றுவதும், பட்டங்கள் பெறுவதும், அதைச் சார்ந்த படிப்புகளும் ஆங்கிலத்திலேயே இருந்த தாலும், உலகியல் நடைமுறைகளை அறிவதற்கும் ஆங்கிலம் தேவைப்பட்டதாலும், ஆங்கிலம் கற்பது அவசியமெனக் கருதினர் மக்கள். வெள்ளையரை எதிர்த்தவர்களில் பெரும் பாலோர் ஆங்கிலத்தில் நன்கு மொழிப்புலமை பெற்றவர்கள் என்பதையும் அறிகிறோம்.

எனவே, மிடியின் (வறுமையின்) நிழல்கூட படியாத அக்குடும்பத்தினர் தம் பிள்ளை மாசிலாமணி ஆங்கிலம் கற்கவேண்டும் என்று விரும்பியதில் வியப்பொன்றுமில்லை.

அவர்கள் விழைவுக்கு ஏற்ற காலம் அப்போது வாய்க்க வில்லையாயினும், 5 ஆண்டுகளுக்குப் பிறகாவது அது நிறைவேறும் என்ற நம்பிக்கையிலிருந்தனர் பெற்றோரும் மற்றோரும். 'நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று' என்ற அனுபவங்கள் சில நேரங்களில் நிகழ்வதுண்டு.

அதுபோன்ற எதிர்ப்பாராத அதிர்ச்சியாக அமைந்தது திரு. வேதாசல கிராமணியாரின் மறைவு ஆறுதல் பெற முடியாத அவலம்தான் அது; ஆனாலும் பெரியவர்களே கவலையில் ஆழ்ந்துவிட்டால், பிறந்த மக்களின் துயரத்தை

துடைப்பது யார்? வாழ்வில் அவர்கள் பெறவேண்டிய நலனை பாதுகாப்பது யார்? இந்த எண்ணம் அந்தக் குடும்பத்தினர் கவலையை தீர்க்கும் மருந்தாக அமைந்தது. வேதாசல கிராமணியாரின் லட்சியங்களை நிறைவேற்றி வைப்பதுதான் தம்முடைய தலையாய கடமையென்று கருதி மக்களின் நலம் காப்பதில் கவனம் செலுத்தினர்.

பன்னிரண்டு வயதில் மாசிலாமணி அவர்கள் 'நார்த் மெட்ராஸ் ஹிண்டு ஸ்கூலில்' சேர்க்கப்பட்டார். அவர் தந்தை முன்பு சேர்க்க விரும்பியதும் அப்பள்ளியில்தான் என்பதையும் நாம் அறிகிறோம்.

புதிய பள்ளியில் சேர்ந்ததும், தோன்றிய புதிய அனுபவம் அவரைச் சிந்திக்க வைத்தது.

ஆங்கிலம் கற்றால்தான் வாழ்வில் உயரமுடியுமா? என்ற கேள்வி அந்தப் பள்ளியில் காலெடுத்து வைத்தது முதல், மாணவர் மாசிலாமணி அவர்களின் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

'ஆம்!' என்ற பதிலை அவர் உள்ளம் ஏற்க மறுத்தது.

அப்பள்ளியின் தமிழாசிரியர் பரமசிவ முதலியார் கற்றுத் தரும் தமிழ் நூல்களின் சுவை செவியிடைப் புகுந்து, மனத்தைத் தொடும்; அமுதாக இனிக்கும்; ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தும்.

மற்ற நேரங்களில் இயல்பாக எழும் எண்ணங்கள், தமிழின் ஒப்பற்ற தன்மையை எழிற்கோலமிட்டு பெருமகிழ்வு எய்தும்.

''தனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து செவியைத் தொட்ட மொழி தமிழ்மொழி. தங்கையர் இருவரையும் தொட்டிலிலிட்டுத் தாய் தாலாட்டிய மொழி தமிழ்மொழி. தன்னைத் தாலாட்டியதும் அம்மொழியில்தானே! அவர்

தாலாட்டில் இசையோடு தவழ்ந்து வரும் கற்பனை வள மிக்க அந்த சொற்களில்தான் எத்தனை இனிமை! ஆம்! அன்னை தன்னைத் தாலாட்டியதும் தமிழ்; அந்த அன்பு முகம் நோக்கி 'அம்மா' என்று முத்துபோல் முதலில் தான் மிழற்றிய சொல்லும் தமிழ்; தந்தை பேசியதும் தமிழ்; சூழ்ந் திருக்கும் மக்கள் அனைவரும் பேசுவதும் தமிழ்; சுற்றத்தார் பேசுவதும் தமிழ்; எல்லாருடைய வாய்மொழியும் தமிழ்; தாய்மொழியும் தமிழ். இந்த மொழியில் உயராதவன் வேறு எந்த மொழியில் உயரமுடியும்?'' என்று தனக்குள் நிகழ்ந்த மனப் போராட்டம் ஒரு சரியான தீர்ப்பை வழங்கியது, மாணவர் மாசிலாமணி அவர்களுக்கு.

மற்றமொழிகள் வெறுக்கத்தக்கது அல்லனவாயினும், சிறப்புக்குரிய செம்மொழி, நம்மொழி, தாய்மொழி தமிழே என்னும் கருத்தை உறுதியாக உளமாற ஏற்றுக்கொண்டார்.

அன்றுமுதல்,

''பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின் றாள்''

என்று கிடந்து, தவழ்ந்து, நடந்து, பயின்று, வளர்ந்து வரும் தமிழ்ப்பாவையின் தோற்றத்தை அன்று வரந்தருவார் என்ற புலவர் சித்தரித்ததுபோல், தமிழ்மீது அவர் கொண்ட விழைவும், வேட்கையும் வளர்ந்துகொண்டேயிருந்தன.

எதையும் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து முடிவை மேற் கொள்ளும் பக்குவம் பெற்றுவிட்டதால், குடும்பத்தினர் யாரும் அவருடைய கருத்துக்கு குறுக்கே நிற்கவில்லை.

## இலக்கியப் பயிற்சி

''குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவர் நூலுரை யாசிரி யன்னே''

என, நல்லாசிரியனிலக்கணத்தைச் சொல்லுகிறது நன்னூல். அந்நூலுரைக்கும் அனைத்துச் சிறப்புகளும் பெற்றவர். மகாவித்துவான் மகாதேவ முதலியார். அன்று அவர் கிருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த பள்ளியில் தமிழாசிரியராகப் (தமிழ்ப் பண்டிட்) பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் தமிழ் கற்கும் தன் விருப்பத்தை வெளியிட்டார் மாணாக்கராகப்போன மாசிலாமணி அவர்கள்.

கற்கவரும் பிள்ளைகளின் முகத்தைப்பார்த்து அகத்தை அளக்கும் அற்புதத் திறன் பெற்றவர்கள் அந்நாளைய ஆசிரியப் பெருமக்கள்.

அவரும் அம்முறையைத்தான் கையாண்டார் அப்போது. தன்னிடம் தமிழ் கற்க வந்த மாணவரின் முகம் எதிர்காலத்தைப்பற்றிய பல சோதிடங்களை அவருக்கு சொல்லிக் கொண்டிருந்தது.

ஞானமும் கல்வியும் நயந்திடும் கோலத்தை மாணாக்கராய் வந்தவரின் முகப்பளிங்கு காட்டிற்று.

எதிர்காலத்தில் தன்னைப்போல மகாவித்துவானாய் இம் மாணாக்கன் வரக்கூடும் என்ற நம்பிக்கை அவர் உள்ளத்தில் ஆழப்பதிந்தது. ஆசானின் முகமலர்ந்த நல்லாசியுடன் தமிழ்ப்பாடம் தொடங்கியது; தொடர்ந்தது; தொடர்ந்து கொண்டேயிருந்தது. இடையறாத தமிழ்ப் பயிற்சியில்

மாணாக்கரின் புலமை பட்டைத் தீட்டப்பட்ட வைரமெனச் சொலித்தது.

முதலில் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம், நன்னூல்; குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம், நளவெண்பா, நைடதம், வில்லிபாரதம் போன்ற எண்ணற்ற இலக்கிய நூல்கள் பயிற்சியில் இடம் பெற்றிருந்தன.

ஆசிரியரின் இல்லம் சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக் கேணி போன்ற தொலைவான இடங்களிலிருந்தபோதும் தண்டையார்ப்பேட்டையிலிருந்து நடந்தே சென்று தமிழ்ப் பயின்று வந்த மனவுறுதி தமிழ்மீது அவர்கொண்ட பற்றுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

இன்றுபோல் அன்று உடனுக்குடன் விரைந்து செல்லும் வாகன (பஸ்) வசதி இல்லையெனினும் எத்தனை பேர் வந்தாலும் இடங்கொடுத்து ஏற்றிச் செல்லும் ட்ராம் வண்டிகள் இருந்தன.

அவை தோற்றத்தில் சிறிய ரயில் வண்டிகளைப் போலவே காட்சியளித்தன. வண்டிக்கு கீழேயுள்ள சக்கரங் கள் தண்டவாளங்கள்மீது படிந்து உருண்டு செல்லும். வண்டியினுடைய மேல்தளத்தின் மீது நீண்டு இணைந் திருக்கும் கம்பியின் நுனியிலிருக்கும் சிறிய சக்கரம் ஒன்று மேலே பொருத்தப்பட்டிருக்கும்.மின்கம்பியொன்றில் படிந்து வண்டியை இயக்கிக் கொண்டிருக்கும். இவ்வாறு இயங்கிக் கொண்டிருந்த ட்ராம் வண்டிகள், சென்னையைச் சேர்ந்த சுற்று வட்டாரங்களைக் கடப்பதற்கு மலிவான கட்டணங் களை வசூலித்து மக்களுக்கு மத்தான சேவைகளை செய்து கொண்டிருந்தன.

இப்படியொரு வாய்ப்பிருந்தும் அவர் நடந்து செல்லும் வழக்கத்தை மேற்கொண்டது, வண்டிக்குச் செலவிடும் பணத்தில் நிறைய தமிழ்ப்புத்தகங்கள் வாங்கலாம் என்பதற்

கும், அரிய பணிகளில் ஈடுபடும்போது எத்தனை சிரமம் வந்தாலும் அதை உறுதியோடு எதிர்கொள்ளத் தம்மால் முடியுமா? என்பதை அறிந்துகொள்வதற்குத்தான்.

இவ்வாறு இனிய தமிழ் இலக்கியப் பயிற்சியைப் பெற்ற அதே நாட்களில்தான் ஓவியப் பயிற்சிபெற சித்திரம் கற்பிக்கும் பள்ளியில் சேர்ந்தார் என்பதையும் நாம் அறிகிறோம்.

★

## எம்டன் போட்ட குண்டு

*1914 இந்தியத் திருநாட்டின் சிறந்த இடங்களுள் ஒன்றான சென்னையில் வாழ்ந்த மக்களால் மறக்கமுடியாத ஆண்டு அது. அவ்வாண்டின் எந்த நிகழ்ச்சியானாலும் அந்த நிகழ்ச்சியைச் சேர்த்தே சொல்லும் அளவிற்கு, முக்கியத்துவம் பெற்ற சம்பவமாக விளங்கியது அது.*

அண்டமே வெடித்துத் துண்டு துண்டாகச் சிதறியது போன்ற கோரப்பேரிரைச்சல்; மக்கள் குலைகளையெல்லாம் நடு நடுங்க வைத்த பயங்கர வெடிச்சத்தம். அந்நிகழ்ச்சிக்கு பிறகு, இங்கிருந்தால் பிழைக்கமாட்டோம் என்று, வீடு வாசலை விட்டுப்பிரிந்து தம் சொந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தோரின் எண்ணிக்கை ஏராளம். இதிலிருந்து அந்த நிகழ்ச்சி எத்தகைய பயங்கரத்தை மக்களிடத்தில் தோற்று வித்திருந்தது என்பதை நாமே புரிந்துகொள்ளலாம். இது தான் ''எம்டன்விட்ட குண்டு, எரிந்த டாங்கு ரெண்டு'' என்று எல்லாராலும் பாடப்பட்டது.

வரலாற்றுப் பிரசித்தம்பெற்ற அந்த ஆண்டில்தான், இந்த வரலாற்று நாயகன் விரும்பியேற்ற இரண்டு பணிகளின் ஈடுபாடும் இருந்தது. ஒன்று தமிழிலக்கியப்பயிற்சி, மற்றொன்று ஓவியப் பயிற்சி.

'தமிழ்' கற்க விரும்பியது மொழிமீது அவருக்கிருந்த இயல்பான பற்று என்பதை நாம் அறிகிறோம். ஆனால், ஓவியம் கற்க எழுமூரிலுள்ள சித்திரவேலை வித்யாசாலையில் (ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்) சேர்ந்தது; அங்குத் தலைவிரித்து ஆடிய சாதிப்பேயை விரட்டவும் உயர்வு தாழ்வு பேதங்களை வளர்த்து, நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் வெறித் தனத்தை அகற்றவுந்தான் என்கிறார் அவர். அப்பள்ளியில் சேரும்போது தன்னை ம. மாசிலாமணி கிராமணி என்னும் பெயரிலும், அவருடைய மைத்துனரை த. சி. தேவராஜ வர்மா என்னும் பெயரிலும் விண்ணப்பித்து சேர்ந்த தாகவும் சொல்லுகிறார்.

அங்குச் சேர்ந்த இரண்டொரு நாட்களிலேயே கிராமணி குல மாணாக்கரெல்லாம் அணிற்பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளைகளாக இருக்கக்கண்டேன் என்று வேடிக்கை யாகக் கூறுகிறார்.

அப்பள்ளியின் எங்ரேவிங் பிரிவின் தலைமை ஆசிரியர் திரு. ஆறுமுகநாயகர், பள்ளி மாணவர்களுக்கு சிம்ம சொப்பனமாகத் தோன்றுவார். பள்ளிக்கு ஒரு நாள் வர வில்லையென்றாலும், பிரம்பால் வாங்கும் அடி, மாணவர் களின் கையைப் பழுக்க வைத்துவிடும். அவ்வளவு பொல்லாதவர் அவர்.

ஆனால், மாணவர் மாசிலாமணி சேர்ந்தாற்போல் நான்கு நாட்கள் பள்ளிக்கு வரவில்லை யென்றாலுங்கூட கண்டிக்காது இன்முகத்தோடு பேசுவார்; பழகுவார். இது மற்றவர்களுக்கு வியப்பாகவும், கடுப்பாகவும் தோன்றும். அதற்கெல்லாம் காரணம் விதிமுறைகளை மீறாது ஆசிரியரின் முன் அனுமதிபெற்று விடுப்பு (லீவ்) எடுப்பதுதான் என்பது ஏனோ, அவர்களுக்குப் புரியவில்லை.

அதே எங்ரேவிங் பிரிவின் ஆசிரியராயிருந்த வீரபத்திர பிள்ளை என்பவரும், மாணவர் மாசிலாமணி அவர்களிடம்

அன்பாகவும், நட்பாகவும் பழகினார். அவர் தன் மாணாக்கருக்கு வேதாந்த உபதேசஞ் செய்தும், அதே மாணவரிடமிருந்து சித்த வைத்திய முறையைப் பயின்றும் குரு மாணாக்கராகவும், மாணாக்கர் குருவாகவுமான ஒரு அதிசய மாற்றத்தை நிகழ்வித்தார்கள்.

அவர் வேதாந்தங் கற்றதன் பயனால்,...

*''ஆண்டவன் தன்னை அடிமையென்றுரைத்தும்,*
*அடிமையை*
*அண்டவனென்றுந் தாண்டரு நிரையக் கிடங்கினில்*
*வீழ்ந்தேன்''*

*என்கிறார் திரு. மாசிலாமணி.*

மாச்சரியங்களை அகற்றி எல்லாரும் நட்புடன் பழகும் ஒற்றுமையை ஏற்படுத்த அப்பள்ளிக்குச் சென்று அதற்கான முயற்சியை மேற்கொண்ட அவரை மற்றவர்கள் புரிந்து கொள்ளாமல் காழ்ப்புணர்வு கொண்டனர்.

அன்று ஆயுதபூஜை. ஆண்டுதோறும் நடக்கும் வழக்கப்படி கலசம் நிறுத்தி வழிபாடு நடந்தது. ஆனால், ஒரு மாற்றம் இருந்தது. அற்புதத்தை அள்ளித் தெளித்து, உயிரோவியம் படைக்கும் ஒப்பற்ற கலைஞன் ரவிவர்மா தீட்டிய வண்ண ஓவியம் கலைமகளின் தெய்விகக்களையோடு பெரிய படமாக அங்கே கொலுவீற்றிருந்தது. பூஜைக்குப் பிறகு, அப்படம் நிரந்தரமாக எங்ரேவிங் பகுதியிலேயே வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அது அன்றைய விலையிலேயே ஐந்து ரூபாய் கொடுத்து மாசிலாமணி அவர்கள் வாங்கி, பள்ளிக்கு அன்பளிப்பாக வழங்கினர். வேறுவேறு மதத்தினரும், இனத்தவரும் பயிலும் அப்பள்ளியில் இந்தப் படத்தை மாட்டக்கூடாது என்று மாணவர்களுள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

''எல்லாரும் சேர்ந்துதானே இந்தப் பூசையை நடத்துகிறோம். மதத்தை மறந்து, சாதியை மறந்து எல்லாரும்

ஒரு குடும்பம் என நினைத்து பயின்றுவரும் இப்பள்ளியில் பேதங்கள் கூடாது. வித்தைக்கரசியான கலைமகளைக் கடவுளாக நினைப்பவர் நினைக்கட்டும். மற்றவர்கள் கலை வண்ணம் மிளிரும் அச்சித்திர சொரூபத்தைக் கண்டு மகிழட்டும்! ஆகவே இப்படம் இங்கிருப்பது சாலச்சிறந்தது என்று விளக்கம் சொல்லப்பட்டது.

அதற்குத் தலைமையாசிரியர் ஆறுமுக நாயகரின் முழு ஆதரவும் இருந்தது. எனவே பூஜை சிறப்பாக நடந்து, படம் குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, சாதி வெறி அகன்று நட்புடன் பழக ஆரம்பித்தனர் அங்குள்ளவர்கள்.

தமிழ்ப் புலமை பெறுவது; ஓவியம் கற்பது போன்ற சொந்த வாழ்க்கை இலட்சியங்களை மேற்கொண்டு ஒவ்வொன்றாகச் செயல்படுத்திக்கொண்டிருந்தாலும் தேசத்தின் நலம் நாடும் லட்சியத்திலும் மாணவர் மாசிலாமணி அவர்களின் மனம் ஈடுபாடுகொண்டது.

அப்போது அன்னிபெசன்ட் அம்மையாரின் 'ஹோம்ரூல்' இயக்கம் இந்தியாவில் தீவிரமாக பரவிக்கொண்டிருந்தது. இந்திய மக்களின் ஒற்றுமைக் குலைவில் தோன்றிய வெள்ளையரின் ஆளும் ஆதிக்கத்தை தவிர்க்கவும், இந்திய மக்கள் தம்மை தாமே ஆளும் திறம்பெற்றவராகும் தன்னம்பிக்கை ஏற்படுத்தவும் தோன்றியதுதான் ''ஹோம்ரூல்'' இயக்கம்.

ஹோம்ரூல் இயக்கத்தின் லட்சியத்தில் மாசிலாமணி அவர்களின் ஈடுபாடு. ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் பள்ளியினரைக் கவலைக்குள்ளாழ்த்தியது. பள்ளியின் கண்காணிப்பாளரா யிருந்த திரு. பாலகிருஷ்ண முதலியார் பக்குவமாக அம் மாணவரிடம் இதை எடுத்துச் சொன்னபோது, ''தம்மால் எந்த இடையூறும் இப்பள்ளிக்கு வராது'' என உறுதி

அளித்தார். அவ்வாறே இண்டர்மிடியட் வரையில் அதாவது ஐந்து ஆண்டுகள் 'ஓவியப் பயிற்சியை' அங்கு முடித்துக் கொண்டுவரும் வரையில், அவரைப்போன்ற ஒரு நல்ல மாணவரைக் கண்டதில்லையென்று சொல்லுமளவிற்கு அவருடைய செயல்முறைகள் அமைந்திருந்தன.

★

## உயிர்நலம் காக்கும் உயர்ந்த இலட்சியம்

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்''

என்ற குறளைப் படித்ததிலிருந்தே ஊன் தின்று உடல் வளர்க்கும் கொடிய பாவத்திலிருந்து விடுபட விரும்பியது அவர் மனம். படிப்படியாக குறைத்துப் பிறகு முற்றும் தவிர்த்தால், குடும்பத்தார்க்குச் சங்கடம் தோன்றாது என்பதால், ஜென்ம வாரமான (பிறந்த கிழமையான) திங்கட்கிழமையிலும், மற்றும் வெள்ளிக்கிழமை, கிருத்திகை, அமாவாசை போன்ற விரத நாட்களிலும் 'புலாலுண்ணாமையை' மேற்கொண்டிருந்தார்.

முற்றிலும் புலாலுண்ணாத புனிதத்தை மேற்கொண்ட முக்கிய சம்பவமொன்று நிகழ்ந்தது அன்று. 'அதுதான் தன் சிற்றன்னையின் மகள் சிவகாமிக்கு மாப்பிள்ளை பார்க்கச் சதுரங்கப்பட்டினத்திற்கு போனது' என்று மனநிறைவோடு சொல்லுகிறார் அவர்.

பெண்ணின் பெற்றோரும்; மாசிலாமணி அவர்களின் குடுபத்தாரும் அதிகாலையில் எழுந்திருந்து பயணத்திற்கு ஆயத்தமாயினர். தண்டையார்ப்பேட்டையிலிருந்து பழைய வண்ணாரப்பேட்டைக்கு வந்து, ட்ராம் வண்டியிலேறி எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அப்போது சுமார் பகல் 11 மணி இருக்கும். புகைவண்டி

போய்விட்டது; மீண்டும் 2 மணிக்குத்தான் வேறு வண்டி புறப்படும் என்றனர்.

அதுவரை காத்திருக்கும் நேரத்திற்குள் சிந்தாதிரிப் பேட்டைக்குச் சென்று உணவு தயார் செய்துகொண்டு வந்தால், இங்குச் சாப்பிட்டுவிட்டு எல்லாரும் புறப்படலாமே என்று கூறிவிட்டு, சிவகாமியின் பெற்றோர் புறப்பட்டுச் சென்றனர்.

ஆட்டிறைச்சி வாங்கி மிளகுத்தூளிட்டு பக்குவமாகச் சமைத்து உணவு உண்டபின், ரயில் நிலையத்திலிருந்த மாலாசிமணி அவர்களுக்குக் கொண்டுவந்தனர். சமைத்திருந்த ஆட்டிறைச்சியும், தயிர் சாதமும் உண்டபின் 2 மணிக்கு ரயிலேறினர். மாப்பிள்ளை பார்க்கச் சென்றவர்கள் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டு பயணம் செய்தனர்.

ஆனால், திரு. மாசிலாமணி அவர்கள் உள்ளம்மட்டும் ஏதோ குற்றம் புரிந்ததுபோல் கலக்கத்தோடு இருந்தது.

புகைவண்டி செங்கற்பட்டு வந்து நின்றதும் இறங்கினர். அங்கிருந்து குதிரை வண்டியின் மூலம் திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோயிலுக்கு வந்து சேர்ந்தனர்.

தந்தைக்கு அவர் முந்தையர் இட்ட பெயரும், இங் குறையும் இறைவனின் பெயரும் ஒரே பொருளைத் தருபவை. ''வேத-கிரி-ஈஸ்வரர்; வேதமே மலையாக உயர்ந்து விளங்கும் ஈசன். அதேபோன்று, வேத-அசலம் (வேதமலை) வேதமே மலையாக அதன் உச்சியிலிருக்கும் இறைவன்-ஈசன்'' என்று ஈசனின் சிறப்புமிகும் பெயர்களை எண்ணிவியந்த அவர், இராக்காலங்களில் சிவதரிசனமின்றி உணவு உட்கொள்வதில்லை என்ற நியமத்தை மேற் கொண்டிருந்ததற்கிணங்க ஆலயத்திற்குள் சென்றார்.

ஆலயத்தின் எல்லா இடங்களிலும், அகல் விளக்குகள் ஏற்றித் தீப அலங்காரம் செய்திருந்தனர்.

என்ன விசேஷமென்று விசாரித்தபோது, ''கார்த்திகை சோமவாரம்'' என்று சொன்னார்கள்.

''இந்த விரத நாளிலும் புலாலுண்ணும் பொல்லாங்கு நேர்ந்ததே'' என்று அனலிடைப்பட்ட புழுவாகத் துடித்தது அவர் மனம்.

''இனி எந்நாளும் மச்சமாமிசம் உண்ணமாட்டேன். இது தேவரீர் திருவடிமேலாணை'' என்று சூளுரைத்தார். பிறகு சிவதரிசனம்செய்து எல்லாரும் வண்டியேறி சதுரங்கப் பட்டினம் போய்ச் சேர்ந்தனர்.

அங்கு மாப்பிள்ளை பார்க்கும் நிகழ்ச்சி முடிய இரவு மணி 10 ஆகிவிட்டதால், திரும்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இவற்றிற்கிடையே விருந்தோம்பலுக்கு உணவு வகைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் முக்கியமாக இடம் பெற்றிருந்தவை மச்சமாமிசப் பதார்த்தங்களே. அவற்றின் மணம் பத்து வீடுகளுக்கப்பாலும் நுகர்வோரின் மூக்குகளைத் துளைத்தன. ஆம்! கிராமணி சமூகத்து மக்கள் மச்சமாமிசம் சமைப்பதிலும் கெட்டிக்காரர்கள்; சாப்பிடுவதிலும் கெட்டிக் காரர்கள்.

நிகழ்ச்சிக்குப் பிறகு பெண் வீட்டாரை அமரச் செய்து, வாழையிலையைப்போட்டு உணவுபரிமாறினர். மாசிலாமணி அவர்களுக்குப் பரிமாறியபோது, மச்சமாமிசம் வேண்டாம் என்று தடுத்துவிட்டார். ஈசனின் திருவடியை நினைந்து ஏற்ற சூளுரை, 'மச்சமாமிசம்' உண்ணா உறுதியைத் தந்தது.

ஊறுகாய் வைக்கச்சொல்லி உணவை உண்டுமுடித்தார்.

அன்றுதான் வள்ளுவன் சொன்ன குறளுக்குச் சரியான பொருள் கண்டதாக நிறைவுற்றது அவர் மனம்.

★

## சிலம்பம் பயின்றதன் சிறந்த நோக்கம்

திரு. மாசிலாமணி அவர்களுடன் நெருங்கிப் பழகிய நண்பர்களுள் மிக முக்கியமானவர் பிசுபாடி வெங்கட கிருஷ்ணசாமி அய்யர் என்பவர். அவர் தெலுங்கு பிராமணர் வெல்நாடு வகுப்பைச் சேர்ந்தவர். ஆசாரமிகுந்த அந்தக் காலத்திலும் உயர்சாதி என்ற பேதமின்றி உயிருக்குயிராகப் பழகியவர்.

பார்க்குமிடமெங்கும் இரட்டையரைப்போன்று மற்றவர் பார்வையில் படுவார்கள் சந்திப்பு, பேச்சு, ஏதாவது ஒன்றைச் செயல்படுத்த தீர்மானிப்பதுபோன்ற நிகழ்ச்சிகள் பெரும்பாலும் தென்னந்தோப்பில்தான் நடைபெறும்.

அப்பேட்டையின் நிலவரத்தைப்பற்றியகணிப்பு அன்று அவர்கள் பேச்சில் இடம்பெற்று இருந்தது.

தன்னைப் பேட்டை பயில்வானாய் காட்டிக்கொள்ள, நோஞ்சான்களை அடித்து நொறுக்கித் தள்ளும் சூரத்தனம் யுத்த தர்மமாகத்தோன்றும் அந்நாளைய சிலருக்கு ஆனால் அதே பயில்வான்கள் ஒரு சிலரைக் கண்டவுடன் பரம சாதுக்களைப்போல், கைகூப்பி வணங்கிச் செல்வார்கள்.

இப்படி வணக்கத்துக்குரிய அவர்களெல்லாம் வித்தை தெரிந்தவர்கள் என்ற விவரம் கிடைத்தபோது, நாமும் அதைக்கற்றுக்கொள்ளலாமேயென்ற எண்ணம் தோன்றியது திரு. மாசிலாமணி கிராமணிக்கும், நண்பர் கிருஷ்ணசாமி அய்யருக்கும். தாம் கற்றுக்கொள்ளும் ‘வித்தை’ தம்மை பயில்வான்களெனக் காட்டிக்கொள்வதற்காக அல்ல; மெலிந்தோரைக் காப்பாற்றவும், அப்பேட்டையின் அமைதியைக் காக்கவுந்தான்.

அவர்கள் வித்தையென்று குறிப்பிட்டது, ‘சிலம்பம்’ என்னும் வீர விளையாட்டைத்தான்.

சிலம்பம் கற்க சிறந்த ஆசானைத் தேடிச் சென்றனர் இருவரும். அன்று, சிலம்ப வித்தையிலேயே சிறந்தவர், சுண்ணாம்புகுளம் முனியப்ப கிராமணியார். ''சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம்; சூட்சுமத்திலிருக்கிறது மோட்சம்'' என்ற வாசகத்தின் வழக்கத்திலிருந்தே அந்தப் பரம்பரையின் கீர்த்தியை நாமே புரிந்துகொள்ளலாம்.

திரு. முனியப்ப கிராமணியிடம் 'சிலம்பம்' பயின்றவர் சூளை மாரியப்ப கிராமணியார். அவர் மகன் ராஜரத்தின கிராமணியார், தன் தந்தையிடமே 'சிலம்பம்' பயின்றவர். திரு. ராஜரத்தின கிராமணியார் அவர்களை ஆசானாகக் கொண்டு, தண்டையார்ப்பேட்டை, சூரிய நாராயணச் செட்டித்தெரு, த. சி. சிங்காரவேலு கிராமணியார் தோட்டத்தில் ''ராஜராஜேஸ்வரி சிலம்பக்கூடம்'' என்னும் பெயரில், திரு. மாசிலாமணி கிராமணி அவர்களும், திரு. ப. கிருஷ்ண சாமி அய்யர் அவர்களும் 'சிலம்பப் பயிற்சிப் பள்ளி'யைத் தொடங்கி நடத்தி வந்தார்கள்.

சிலம்பப் பயிற்சிக்கு, காலந் தாழ்த்தாமல் வருவது; கட்டுப்பாடு குலையாமல் எல்லாரும் ஒற்றுமையாயிருப்பது; 'வித்தை' தெரிந்த பின்பும் அகந்தை கொள்ளாதிருப்பது; யாரிடமும் வீண் வம்புக்குப் போகாமலிருப்பது; சீரான பயிற்சியில் நேரான கவனம் செலுத்துவது போன்ற விதிமுறைகள் மாணுக்கர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டன. பிறகு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த சிலம்பப் பயிற்சிப் பள்ளியில்தான், வெங்கடகிரி சமஸ்தான சமஸ்கிருத வித்துவான் சுந்தரராம சாஸ்திரி அவர்களின் மகன் வேதகிரி சாஸ்திரி B.A., B.L. அவர்களும், பழைய வண்ணாரப்பேட்டை சுப்பிரமணி ஐயரும் மற்றும் த. சி. தேவராஜ கிராமணி, த. சே. உமாபதி கிராமணியார் M.A., L.T., Dip. Geo. (முன்னாள் தலைமை ஆசிரியர், சென்னை, நவாப் சி. அப்துல் ஹக்கீம் உயர்நிலைப் பள்ளி) ஆகியோர் சிலம்பம் பயின்றனர்.

அப்பள்ளியில், பயிற்சி பெற்ற மற்ற மாணவர்களை விஞ்சுமளவிற்குக் கற்றுத் தெளிவதில் தன்னிகரற்று விளங்கினார் திரு. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

இரண்டடி, நாலடி, ஐந்தடி, எட்டடி, பதினாறடி என கால்களிடுமளவுக்கேற்பப் பக்க உடான், எதிர் உடான், முன்ஜோக்கு, பின்ஜோக்கு முதலியனவும் கம்பின் சுழற்சியும் அதற்கு ஈடு கொடுக்குமளவிற்குச் சுறுசுறுப்போடு இயங்குகின்ற கைகளின் லாவகமும் காண்போரை மெய்ச்சிலிர்க்க வைத்துவிடும். இத்தகு திறன் கைவரப்பெற்ற மாணாக்கரை பார்த்ததும் ஆசான் ராஜரத்தின கிராமணிக்கு உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்துவிடும். வித்தையின் திறன் மிகுந்திருந்த அம்மாணாக்கரிடந்தான் அதைக் கட்டிக்காக்கும் அடக்கமும் இருந்தது.

இம்மாணாக்கரிடந்தான் நம்மிடமிருக்கும் நுட்பங்களையெல்லாம் சொல்லித்தரவேண்டும். அவற்றின் மதிப்புணர்ந்து காக்கும் பக்குவம் இவரிடந்தானுளது என்று தீர்மானித்தார். அதன்படி, தன் மறைவுக்கு முன் அதை நிறைவேற்றியும் வைத்தார்.

இது கிருஷ்ணசாமி ஐயருக்குச் சற்று மனவருத்தத்தை ஏற்படுத்தியது. இதைத் தன் பேச்சின்போது தெரிவித்துக் கொண்டார்.

கற்றுத்தரும் அந்நுட்பங்களைப் பொன்னாக-கண்ணாகப் போற்றிகாப்பவர் நம்மில் எத்தனைப்பேரிருப்பர்? அதனால் அவற்றை எல்லாருக்கும் சொல்லித்தராது, நம்பிக்கைக்கு உரியவரிடமே ஒப்படைக்க விரும்பினார். அப்படி அவர் நம்பிக்கைக்குரியவனாக நான் இருந்தேனோ என்னவோ? அதனால்தான் அந்நுட்பங்களை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்.

"அந்நுட்பங்களுக்கு அவர் விரும்பிய பாதுகாப்பை நீர் அளிப்பதாயிருந்தால், அவற்றை உம்மிடமே ஒப்படைக்

கிறேன்'' என்று, அந்நுட்பங்களையெல்லாம் தன் நண்பன் பிசுபாடி வெங்கடகிருஷ்ணசாமி ஐயருக்குச் சொல்லித்தந்து, அன்றுமுதல் அவையெல்லாம் தனக்குரியனவல்ல என்பது போல், 'சிலம்ப' உடமைகளையெல்லாம் அர்ப்பணித்து நிற்கும் தியாகச் சீலனாகக் காட்சித்தரும் தன் நண்பன் மாசிலாமணியைக் கண்டதும் கிருஷ்ணசாமி அய்யரின் மனம் கலங்கிவிட்டது; அவர் கண்கள் நீரைப் பொலபொலவென உகுத்தன.

''இத்தகு, உத்தம நண்பனையா புண்படப் பேசினேம்? ஆசானின் உயர்நோக்கத்தையுமல்லவா பழித்தோம்?'' என்று மனம் நெகிழ்ந்து வருந்தினர்.

அன்று, ஆசானின் மனத்தை நிறைவுசெய்யத் தன் வலக்கரத்தின் பெருவிரலையே காணிக்கையாக அர்ப்பணித்தான் ஏகலைவன்.

இன்று என்மனக்குறையை நீக்க, ''தான் கற்ற வித்தையின் நுட்பங்களையெல்லாம் ஒப்படைத்தான் தியாக சீலன் மாசிலாமணி'' என்ற உண்மையை உணர்ந்து நெகிழ்ந்து நிறைவு கண்டது அவர் மனம்.

''உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

என்ற குறளை மெய்ப்பித்த நண்பர் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் ஆசானாகவும், கண்கண்ட தெய்வமாகவும் தோன்றினார் கிருஷ்ணசாமி அய்யர் அவர்களுக்கு.

அன்றுமுதல், அவர்கள் 'அன்பு, தியாகம்' என்னும் சுடர்பெற்று ஒளிரும் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தனர்.

★

## சமூகப் பெரியவர்
## திரு. விஜயதுரைசாமி கிராமணி அவர்களுடன் சந்திப்பு!

சாதிவெறியகற்ற எழுமூரிலுள்ள சித்திரவேலை வித்யா சாலையில் முன்பு சேர்ந்து; எல்லாரிடமும் தோழமையை ஏற்படுத்திய திரு. மாசிலாமணி கிராமணி அவர்கள் சமூக நலங்காக்கும் சிந்தனையை மேற்கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. இது அவர் கொண்ட கொள்கையிலிருந்து பின்வாங்கும் மறுபரிசீலனையல்ல. அந்நோக்குக்குப் பல மாக அடித்தளமிடும் பரிமாணத்தின் ஆரம்பந்தான் அது.

தன்னலம் பேணி, குடும்ப நலம் காத்து-காத்து, உறவு நலம் நாடி-நாடி, ஊர் நலம் கருதி-கருதி, நாட்டுநலம் மிகவும் விழைந்து, உலகப் பொதுநலம் என விரிவடைவது தான் தொண்டின் வளர்ச்சி.

எனவே, உறவு என்னும் எல்லையின் விரிவிலிருக்கும் சமூகத்தின் நலம்நாடுவதும், அதன் நலிவை நீக்கப் பாடு படுவதும் தவறான நோக்கங்களல்ல. அதே நேரத்தில், சாதியின் பெயரால் வெறித்தனங்களை வளரவிட்டு, மற்ற சமூகத்துத் தோழமையைப் பகைத்து நிற்பதுதான் அநாகரீகமான செயலாகும்.

பகைமுகம்காணா பண்பான சமூக (சாதி) தொண்டினை வள்ளுவனே வரவேற்கிறார்.

அதுமட்டுமா?

"சுற்றம் என்ற எல்லையில் நலிந்தோராயினும், எளியோராயினும் அவர்கள் தொல்லையைத் தீர்ப்பதே பாவம் என்றதோரணையில் 'நான் பொதுநலத் தொண்டன்' எனக் கூறும் போலிவேடத்தை இடித்துக் கூறுகிறார் இப்படி.

''கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்''

என்னும் குறளின்மூலம்;

கொடுத்தல்; இன்சொலாற்றல் என இருவகையாலும் ஏற்கப்படும் தொண்டுகளின் சிறப்பு, சுற்றத்தாரால் சுற்றப் படுவதால் அவை சுற்றத்தாருக்கு உரியவை என்பதை மறை பொருளாகச் சுட்டிக் காட்டுகிறார்.

சாதி, இனம் என்று கூறாமல், இயல்பாக எழும் அன்பு சார்ந்த வெறியற்ற உரிமை உணர்வை (உறவின் விரி-வடைந்த எல்லையாகத் தோன்றும் சமூகத்தை) அடுக்கிய சுற்றம் என்னும் அழகிய சொற்கொண்டு விளக்குகிறார்.

அண்மையிலிருக்கும் அவலத்தைப் போக்கத் துணியாத மனம், தூரத்திலிருக்கும் துன்பத்தை எப்படிப் போக்கும் என்பதுதான் வியப்புக்குரிய வினாவாகும்.

எனவே, ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் சமூகச் சிந்தனையை மேற்கொண்டது, உண்மையான தொண்டின் பரிமாணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும் கூறலாம்.

அன்று சான்றோர் (கிராமணி) சமூகத்தவரால் நிர்வகிக் கப்பட்டுவந்த சில ஆலயங்கள் தண்டையார்ப்பேட்டையில் அமைந்திருந்தன.

அவை: 1 கும்பாலம்மன்கோயில் 2 வரதராஜப்பெருமாள் கோயில் 3 அகத்தீசுவரர்கோயில் 4 சேணியம்மன்கோயில் 5 எல்லைமாற்றம்மன்கோயில் எனபன. இவ்வைந்து கோயில் களும் பஞ்சாலய தருமபரிபாலன சபையின் நிர்வாகத்தில் ஆலயங்களின் திருப்பணிகள் நடைபெற்று வந்தன.

அந்தக் கோயில்களின் தருமகர்த்தாக்கள் பரம்பரை பரம்பரையாக பதவிக்குவரும் வழக்கத்தை மேற்கொண்டு

இருந்தனர். பரம்பரைப் பதவியென்பது சில சந்தர்ப்பங்களில் பொருத்தமற்றதாக அமைந்துவிடுகிறது.

''தந்தை பெயரை (நற்பெயரை) மகன் எடுப்பான்'' என்ற எதிர்ப்பார்ப்பு, 'கெடுப்பான், என திசை மாறிச் செல்ல ஆரம்பித்தது. இதை மாற்ற சபையின் நிர்வாகத்தினரால் தேர்ந்தெடுக்கப்படும் நபரே, பதவிக்கு வர வேண்டும் என்று விரும்பினார் திரு. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

அப்போதுதான் நம் சமூகப் பெரியவர் திரு. த. விஜய துரைசாமி கிராமணி அவர்களின் சந்திப்பும், அவரோடு சேர்ந்து சமூகத் தொண்டாற்றும் வாய்ப்பும் கிடைத்தது திரு. ம. மாசிலாமணி கிராமணி அவர்களுக்கு.

திரு. த. விஜயதுரைசாமி கிராமணி அவர்களைப்பற்றி தென்னாடுமுற்றும், சிலோன், மலேசியா, ரங்கூன் முதலிய வெளிநாடுகளிலும் அன்று நம் சமூகத்தில் அறியாதவர் யாருமே இருந்திருக்கமுடியாது. பல மொழிகளில் நன்கு புலமை பெற்றவர். நூல் பல கற்றவர், நல்ல ஆராய்ச்சியாளர். காலப்போக்கிலே நம் சமூகம் கண்ட மாற்றங்களை ஆய்வுசெய்து அறிந்தவர். நாடார் என்னும் சொல்லாராய்ச்சி நமது குலத்தொழில் யாது? க்ஷத்திரிய குலவிளக்கம் போன்ற நூல்களை இயற்றியவர். சான்றோர் சமூகத்தவர்க்கென்று ''க்ஷத்திரியமித்திரன்'' என்னும் பத்திரிகையைச் சிறப்பாக நடத்தியவர்.

பஞ்சாலய தரும பரிபாலன சபையின் தலைவராயிருந்த புதுவண்ணை திரு. மாணிக்க கிராமணிக்குப் பிறகு, தலைவராய் வந்தவர் திரு. த. விஜயதுரைசாமி கிராமணி ஆவார். அப்போது, உடனிருந்து செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பு திரு. ம. மாசிலாமணி கிராமணிக்கு ஏற்பட்டது. இவர்கள் தம் சீரிய முயற்சியினால் பரம்பரை பதவி அகன்று; நிர்வாகத்தாரால் தேர்ந்தெடுக்கும் முறை நடைமுறைக்கு வந்தது.

அதுமுதல் ஆர்வமும், துடிப்புமிக்க கட்டிளங்காளையாக விளங்கிய வாலிபர் மாசிலாமணி கிராமணி அவர்களைத் தம் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக ஏற்றுக்கொண்டார் நம் சமூகப் பெரியவர் த. விஜயதுரைசாமி கிராமணியார் அவர்கள்.

அத்தகு அந்நியோந்நியந்தான் சொத்துக்களைப் பற்றிய ஆவண ஓலைகள் பலவும் ஆய்ந்தறியும் வாய்ப்பு ஏற்பட்டது ம. மாசிலாமணி கிராமணி அவர்களுக்கு. இது பெரியவர் த. விஜயதுரைசாமி கிராமணி அவர்கள் விருப்புடன் ஒப் படைத்த பொறுப்பாகும். இதுபோன்ற அனுபவங்கள் தான் சபையின் தரும சொத்துக்களைப்பற்றிய சரியான தகவல் களைத் தந்தது ம. மாசிலாமணி கிராமணி அவர்களுக்கு.

தன் எண்ணங்களை வெளியிட 'க்ஷத்திரியமித்திரன்' பத்திரிகையில் எழுதும் பணியைத் தொடங்கியதும் அப் போதுதான் என்கிறார் இந்த வரலாற்று நாயகன்.

★

## அறிவுச் சுடரேற்றும் ஆசிரியர் பணி

'பிறர் நலம் நாடும் சிந்தனைமட்டும்போதுமா? உன்னைப் பற்றியும் கொஞ்சம் சிந்திக்கவேண்டாமா?' என்று குடும்பப் பெரியவர்களின் மனக்குறை வார்த்தைகளாக வந்து காதில் விழுந்தன மாசிலாமணி கிராமணி அவர்களுக்கு.

அப்போது ''உத்தியோகம் புருஷ லட்சணம்'' என்று உயர்ந்த கருத்து அவர் உள்ளத்தைத் தொட்டது.

''எந்தத் தொழிலை மேற்கொள்ளுவது'' என்ற கேள்விக்கு இடம்வைக்காமல், ''அதுதான் நம் குலத்

தொழிலை மேற்கொள்ளலாமே'' என்று பதிலையும் சொல்லி வைத்தார்கள் குடும்பத்துப் பெரியவர்கள்.

'குலத் தொழில்' என்று அவர்கள் குறிப்பிட்டது 'மது' இறக்குவதும், விற்பதுந்தான்.

''மது இறக்குவதற்கு நம்மிடம் வேலைப்பார்க்கும் பலர் இருக்கிறார்கள்; கல்லாவில்போய் உட்காருவதற்குத்தான் நீ, சம்மதிக்க வேண்டும்'' என்பது பெரியவர்களின் அபிப்பிராயம்.

மேலே பெரியவர்கள் குறிப்பிட்ட இரண்டையும் 'குலத் தொழில்' என்று ம. மாசிலாமணி கிராமணி அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பல கிராமங்களில் 'மணியம்' பார்த்துவந்த சிறப்புண்டு என்பதனால், 'கிராமணி' என்னும் பட்டப் பெயரைப் பெற்றதையும் பலர் நன்குணர்வார்.

நாளடைவில் இந்தச்சமூகம் முகமதியரின் ஆளுமையின் ஆதிக்கத்தில், நலிவடைந்து தொழிலிழந்து அல்லலுற்ற போது ஆபத்திற்கு பாவமில்லையென்று ஏற்றுக்கொண்டது தான், மது இறக்குவதுங் - மது விற்பதும்.

காலப்போக்கிலே அவை குலத்தொழிலாகவே இந்தச் சமுகத்தையே சுற்றி வளைத்துக்கொண்டது.

விற்பது மதுவே யானாலும், அதிலும் சில விதிமுறை களைத் தமக்குத் தாமாகவே வகுத்துக்கொண்டு வர்த்தகத் தில் ஈடுபட்டிருந்தனர் சான்றோர் சமூகத்தினர்.

உழைத்து, களைத்து, உற்சாகமிழந்து வருவோர்க்கு அளவோடு 'மது' வழங்குவது; மிகவும் புளிக்காத மதுவாகத் தருவது போன்ற வர்த்தகத் தர்மங்களையும் மேற்கொண்டு வாழ்ந்தனர்.

புளிக்காத 'மது' உடல் நலத்தைக் கெடுக்காது; ''அளவோடு உட்கொள்ளும் எதுவும் நஞ்சாக மாறாது'' என்ற அசைக்கமுடியாத நம்பிக்கைகள்தாம் இந்த சமூகத்தினர் மேற்கொண்ட வர்த்தக தர்மத்தின் அடிப்படைகளாக அமைந்திருந்தன.

இத்தகு நெறிமுறைகளோடு அத்தொழில் நடைபெற்றதால்தான் ''குடியால் அழிந்த குடும்பங்கள் பல உண்டு'' என்று சொல்லாதளவிற்கு குற்றமற்ற தொழிலாகயிருந்தது அன்று.

எப்படியிருத்தாலும், அந்தத் தொழிலில் மாசிலாமணி கிராமணி அவர்களால் ஈடுபட முடியவில்லை.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பது போல், தாம் பெற்ற ''தமிழை - தமிழமுதை'' வாரி - வாரி வழங்கும் பணியை மேற்கொள்ளவே விரும்பியது அவர் மனம்.

அறியாமை யகற்றும் ஆசிரியர் பணியையே நாடினர்.

காவேரிப்பாக்கம் திரு. ரா. நமச்சிவாய முதலியார் என்பார் அரிய நூல் பல கற்ற தமிழறிஞர். பெரியவர்களுடன் நெருங்கிப் பழகியவர். வேதாசல கிராமணியாருக்கும், அத்தியந்த நண்பர். எனவே தன் நண்பர் மகன் மாசிலாமணி ஆசிரியர் தொழில் புரிய விழைவது அறிந்து மகிழ்வுற்றார்.

28—6—1926-ல் திரு. கா. ரா. நமச்சிவாய முதலியார் சிபாரிசின்பேரில் கலவல ராமானுஜம் செட்டியார் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டின் கல்லாமையை விரட்டத் தனக்கும் வாய்ப்புக்கிட்டியதே என்று மகிவுற்றது அவர் மனம்.

பள்ளிப் பிள்ளைகளைப் பார்க்கும்போதெல்லாம் தன் குடும்பத்துப் பிள்ளைகளைப் பார்ப்பதுபோல் பற்றும், கனிவும் ஏற்படும்.

இவர்களெல்லாம் நலமான கல்வியும், வளமான வாழ்வும் பெறவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும்.

பள்ளியில் கற்க வரும் பிள்ளைகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒருமுறை சொன்னாலே புரிந்துகொள்ளும் பிள்ளைகளுமுண்டு; இரண்டு மூன்றுமுறை சொன்னபிறகே உள்ளத்திலேற்கும் பிள்ளைகளுமுண்டு, பன்முறை சொன்ன பிறகே பாடங்களில் கவனம் செலுத்தும் பிள்ளைகளுமுண்டு.

நோயுணர்ந்து பிணிதீர்க்கும் நல்ல மருத்துவரைப் போன்று, பிள்ளைகளின் மனப் பக்குவத்தை யுணர்ந்து, கற்பிக்கும் ஆசிரியர்கள்தான் சிறந்துவிளங்கமுடியும். இதை மெய்ப்பித்துக் காட்டியவர், ஆசிரியர் மாசிலாமணி கிராமணி அவர்கள்.

ஏதோ ஊதியம் பெறுகிறோம்; அதற்குத்தக பணி யாற்றினால் போதுமென்று நினையாது, ''இது இந்தத் தலைமுறையின் நலங்காக்கும் நற்றொண்டு'' என உணர்ந்து உளமாற சேவைசெய்த பெருமை அவருக்கு எப்போதும் உண்டு.

அவரிடமிருந்த இத்தகு சிறப்புப் பண்பை மற்றவர்கள் தெரிந்துகொள்ளுமளவிற்கு, அவர்தம் செயல்முறைகள் அமைந்திருந்தன.

கருணைமிகும் வள்ளல் கலவல ராமானுஜம் செட்டியார் மறைவுக்குப் பிறகு, அவர் மனைவி திருமதி எத்திராஜம்மாள் அப்பள்ளியை நடத்தியது குறுகிய காலமேயாகும். பிறகு 'தம்மால் முடியாது' என்றெண்ணி அப்பள்ளியை மூடிவிடத் தீர்மானித்தார்.

இச்செய்தியறிந்த ஆசிரியர் திரு. மாசிலாமணி கிராமணி அவர்கள் உள்ளம் பதைபதைத்தது. ''அறிவொளி வழங்கும் பள்ளியை மூடினால் எத்தனை பிள்ளைகளின் வாழ்வு இருண்டு போகும். எங்கோ ஓரிரு பள்ளிகள் இயங்கிக்

கொண்டிருக்கும் இக்காலத்தில், இருக்கும் பள்ளியையும் இழந்து முடிவிடுவது எவ்வளவு பெரிய இழப்பு.'' இது போன்ற கணிப்பு ஆறுதல் பெற முடியாத ஆற்றாமையைத் தோற்றுவித்தது அவருக்கு.

''எப்படியும் இப்பள்ளியைத் தொடர்ந்து இயக்க வேண்டும். அதற்கு ஆவன செய்வோம்'' என்ற உறுதியை மேற்கொண்டார்.

எண்ணித் துணிந்த அப்பணிக்குத் துணை நின்றார் அப்பள்ளியின் தலைமை ஆசிரியராயிருந்த திரு. நாராயண ஐயர் என்பார். முறுக்கு மீசையுடன் கம்பீரமாக காட்சி அளிக்குமவர் பேச்சும் அதுபோன்றே இருக்கும்.

பிறப்பால் பிராமணராக இருந்தாலும், அக்காலத்தில் அச் சமூகத்தினரின் மேலாதிக்கத்தை அறவே வெறுத்தார் அவர். ''பார்ப்பானை நம்பாதே! இன்று ஒரு O. T.யும், ஒரு P. T.யும் வாராதிருந்தால், பார்ப்பானின் அட்டகாசம் எல்லையைக் கடந்திருக்கும்'' என்று, தான் பிறந்த சமூகம் என்றும் பாராமல், பாரதியாரைப்போல் சற்றும் தயக்க மின்றி, ஆசிரியர் மாசிலாமணி கிராமணி அவர்களிடம் கூறுவார்.

அவர் O. T. என்றும், P. T. என்றும் கூறியது; O. தணிகாசலம் செட்டியார் அவர்களையும், P. தியாகராஜ செட்டியார் அவர்களையுந்தான்.

அவ்விருவரும் அந்நாளில் ஜஸ்டிஸ் பார்ட்டியைத் தொடங்கி மிகச் செல்வாக்குடன் இருந்தவர்கள் என்பதும், பிராமணராதிக்கத்தை வெறுத்தவர்கள் என்பதும் நாடே நன்கறியும்.

தலைமையாசிரியராய் பணியாற்றிய அனுபவத்தில் இருந்து, எல்லா ஆசிரியர்களின் குணாதிசயங்களையும் நன்குணர்ந்தவர் நாராயண ஐயர் B.A. அவர்கள். எனவே

ஆசிரியர் மாசிலாமணி கிராமணி அவர்கள் அங்குப்போய்ச் சேரும்போதே சூழ்நிலைகளை விளக்கிக் கூறி அதற்கேற்ப நடந்துகொள்ளுமாறு கூறினார்.

இவ்வளவு அந்நியோந்நியம்கொண்ட அவ்விருவரும் இணைந்து பள்ளியைத் தொடர்ந்து இயக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஒருநாள் பெஸ்ட் அண்டு கம்பெனியின் துவிபாஷி (மொழிபெயர்ப்பாளர்) பழனியாண்டி முதலியார் மூலமாக அப்பகுதியின்செல்வந்தர் ஈத்துவக்கும் இன்பமுறும் பெருந்தகையாளர், நவாப் சி. அப்துல் அக்கீம் என்னும் பெரியாரை அணுகி, அப்பள்ளியை யேற்று நடத்துமாறு கேட்டுக்கொண்டனர் மூவரும்.

அச்சீமானின் கருணை மிகும் இசைவால், ''நவாப் சி. அப்துல் அக்கீம் நடுநிலைப் பள்ளி'' என்ற பெயரோடு மீண்டும் சிறப்புடன் இயங்கத் தொடங்கியது அது.

அப்போது, திரு. டி. எஸ். உமாபதி என்பவர் B.A, பட்டப்படிப்புவரை படித்து எந்த வேலையிலும் அமரா திருப்பதை அறிந்து, அவரை அழைத்துவந்து தற்காலிக ஆசிரியர் பணியில் அமர்த்தினார் திரு. ம. மாசிலாமணி கிராமணி அவர்கள். பணியிலமர்ந்தபிறகு, டி. எஸ். உமாபதி அவர்கள் தொடர்ந்து படித்து L.T., பட்டமும் பெற்றார்.

பிறகு, திரு. நாராயண ஐயர் அவர்கள் தலைமை ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெற்றபோது, திரு. டி. எஸ். உமாபதி B.A., L.T., அவர்களையே தலைமை ஆசிரியராக அமருவதற்கு திரு. மாசிலாமணி கிராமணி அவர்கள் மேற் கொண்ட முயற்சி வெற்றி கண்டன.

அப்பள்ளியின் ஆசிரியர் பணியிலிருந்தபோதுதான் சதாவதானம் திரு. கிருஷ்ணசாமி பாவலர் அவர்களின் இளவல் பன்மொழிப்புலவர் வித்துவான், டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M.A., B L., M.O.L., அவர்களிடம்

'வித்துவான்தேர்வுக்கு' தொல்காப்பியமும் சங்க இலக்கியங் களும் பயின்றார் திரு. ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

ஜார்ஜ் டவுன் (இன்றைய பாரிமுனை) அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள நவாப் சி. அப்துல் அக்கீம் நடு நிலைப் பள்ளியிலிருந்து (ஆசிரியர் பணி முடிந்ததும்) சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வீட்டிற்குப் பாடங்கேட்கச் செல்வார். 6 மணியிலிருந்து 8 மணிவரை பாடங் கேட்டபின் மீண்டும் தண்டையார்பேட்டையிலுள்ள தன் வீட்டிற்குத்திரும்புவார். வந்து சேர மணி பத்து ஆகிவிடும்.

அப்போது, அவர் வீட்டிற்கு 'மின்விளக்கு' வசதி கிடையாது. வீட்டுக்குமட்டுமல்ல, அந்தத் தெருவுக்குக்கூட கிடையாது கம்பங்களின் உச்சியில் கண்ணாடிக் கூண்டு களுக்குள் ஏற்றிவைக்கப்படும் 'லாந்தர்' விளக்குகள் 'மினுக்கு மினுக்கு' என்று எரிந்துகொண்டிருக்கும். அப் போதும் சிவதரிசனம் பண்ணிய பிறகே சாப்பிடப்போவார். இப்படி எந்தச் சிரமத்தையும் பாராது பயின்று முதல் முயற்சி யிலேயே 'வித்துவான் பட்டம்' பெற்றார் திரு. மாசிலாமணி கிராமணி அவர்கள்

தொண்டுள்ளத்தோடு பதின்மூன்றாண்டுகள் தமிழாசிரி யராக வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் பணியாற்றியது அப்பள்ளியின் வரலாற்றில் சிறப்பு மிகு அத்தியாயமாகும்.

நவாப் சி. அப்துல் அக்கீம் பள்ளியின் சேவைக்குப்பிறகு சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக போய்ச் சேர்ந்தார்.

அப்பள்ளி மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க, ஆசிரியர் என்ற முறையில் சில சீரிய நடை முறைகளைக் கையாண்டார்.

தாம் நடத்தும் தமிழ் வகுப்பு ஆரம்பமாவதற்கு முன் அன்றைய மாணவர்கள் வருகைப் பதிவேட்டை கொண்டு வரும்படிசெய்து, அதிலுள்ள அனைத்து மாணவர்களும் வகுப்பிலுள்ளனரா என்று சரிபார்த்திடுவார். நன்கு படிக்கும் ஆர்வமுள்ள மாணவர்களை பத்து மாணவருக்கொருவர் என்ற முறையில் பிரதிநிதியாக நியமிப்பார். அம்மாணக்கர் தம் கண்காணிப்பில் உள்ள மாணவர்களில் யார் யார் சரியாக பாடம் ஒப்புவிக்கவில்லையோ, வீட்டு பாடங்களை ஒழுங்காகச் செய்யவில்லையோ; அந்த மாணவனின் பெயரைக் குறித்து ஆசிரியரிடம் கொடுத்துவிடுவர்.

பள்ளி இயங்கும் நேரம் முடிந்ததும் கற்பதில் கவனக் குறைவாக இருக்கும் மாணவர்களையெல்லாம் தங்கி இருக்கச்செய்து மேலும் பன்முறை விளக்கிச் சொல்வார். சரியான விளக்கம்பெற்ற பிறகே வீட்டிற்கு அனுப்புவார்.

பள்ளிக்கு வராத மாணவர்களின் வீடு தேடிச்சென்று, ஏன் வரவில்லையென்று காரணமறிந்து வருவார்.

மாணவர்கள் நெற்றியில் திருநீறணிந்து, சந்தனப் பொட்டிட்டு வரவேண்டும் என்பது இவர்தம் விருப்பமாகும்.

இதை இன்றளவும் கடைப்பிடித்து நலமுடன் வாழ்ந்து வரும் மாணாக்கர், புரோக்கர் சம்பந்தச் செட்டியார் அவர்களைச் சிந்தாதிரிப்பேட்டையில் காணலாம்.

பள்ளிப் பிள்ளைகளின் ஒழுக்கத்திற்கு ஆசிரியர்களே முன் மாதிரியாக இருக்கவேண்டும் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். நாட்டுப்பற்று, காலத்தைக் கண்ணாகப்போற்றுதல், கடமை உணர்வு, சீருடை, நேர் கொண்ட பார்வை, நிமிர்ந்த நடை அனைத்தும் இளைஞர்களுக்கு வேண்டும். ஆகவே, இவற்றை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் ஆசிரியர்களே சாரணர் இயக்கத்தில் பங்குகொள்ளவேண்டும் என்றுகூறி தானும் அதில் பங்கேற்று

மற்ற ஆசிரியர்களையும் சேர்த்தார். அந்தத் தோற்றத்தில் ராணுவ வீரரைப்போல் காட்சி தரும் நிழற்படம் ஒன்று இன்றும் அவரிடமுள்ளது. இத்திட்டம் செயற்பட விரும்பி, முதலில் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களிடம் சொன்னவர் அப்பள்ளியின் நிர்வாகஸ்தராயிருந்த பன்மொழி புலவர் வித்துவான் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M.A., B.L., M.O.L., ஆவார்.

'வித்துவான்' இறுதித் தேர்வு பயிற்சிக்கு மட்டுமே தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களிடம் பாடங் கேட்டாராயினும், அவரும் தம் வணக்கத்துக்குரிய ஆசான் என்று நன்றிப்பெருக்குடன் சொல்லிப் பெருமிதம் கொள்கிறார் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

வித்துவான் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் காரியஸ்தர் பணியிலிருந்து விலகிய பிறகு, அப்பணியை ஏற்றுக்கொண்டவர் திரு சண்முகம் செட்டியார் என்பவர்.

வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அப்பள்ளியில் இருந்து ஓய்வு பெறும்வரையில் அப்பள்ளியின் கரஸ்பான்-டெண்டாயிருந்தவரும் சண்முகம் செட்டியார் அவர்களே ஆவர்.

''வாங்கும் ஊதியம் வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை'' என்பதை நிர்வாகத்திற்கு எடுத்துச் சொல்லி தம் ஊதிய உயர்வுக்கு வழிதேடிக்கொள்ளுவார்கள் ஆசிரியர்களில் பலர்.

ஆனால், அவ்வழியைப்பின்பற்ற ஆசிரியர் வித்துவான் ம. மாசிலாமணி அவர்களின் மனம் இடந்தரவில்லை.

ஒருநாள், அப்பள்ளியின் நிர்வாகத் தொடர்பு அதிகாரியாயிருந்த சண்முகம் செட்டியார் அவர்கள், வித்துவான்

மாசிலாமணி கிராமணி அவர்களை அழைத்து சில விவரங்களைக் கேட்டார்.

எல்லோரும் தன் பணமுடையைச் சொல்லி ஊதிய உயர்வு பெறுகிறார்களே! நீர்மட்டும் ஏன் அவ்வாறு கேட்பதில்லை. 'அழுத பிள்ளைதானே பால் குடிக்கும்' என்று கேட்டுவிட்டு, ஆசிரியர் வித்துவான் மாசிலாமணி கிராமணி அவர்களின் முகத்தைப் பார்த்தார்.

''குழந்தையின் வயிற்றைத் தொடும் பசிப்பிணியின் நேரமறிந்து, தாய்மை உணர்வோடு அழுவதற்கு முன்பே பால் புகட்டுபவள்தான் உத்தமத்தாய்; அழுதபிள்ளைக்குத்தான் பால்கொடுக்கவேண்டும் என்று நினைப்பவள் மத்திமத் தாய்; எவ்வளவு நேரம் குழந்தை அழுதாலும், ஏறெடுத்தும் பாராது, தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு அழுத குழந்தை அயர்ந்திருக்கும் நேரத்தில், பால் புகட்ட வருபவள் அதமத்தாய்'' என்று சொல்லி, அவர் கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தார் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

★

## நவில்தொறும் நூல்நயம் போன்ற நட்பு

''நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு''

''கற்க கற்க இன்பம் பயக்கும் (நல்ல) நூலைப்போன்று பழகப் பழக பண்பாளரின் கேண்மை வளர்ந்து வளர்ந்து நல்லின்பம் சேர்க்கும்'' என்பது வள்ளுவரின் வாக்கு.

இதை மெய்ப்பித்து வாழ்ந்துவரும் பண்பாளர் உண்டென்றால் அவர்கள், வித்துவான் மாசிலாமணி கிராமணி, வித்துவான் சக்கரபாணி நாயகர் ஆகிய இருவருமேயாவர்.

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி இவர்களை ஆசிரியர்களாக ஒருநாள் முன்னும் பின்னுமாக வரவேற்றது.

இவர்களுள் வித்துவான் சக்கரபாணி நாயகர் அவர்கள் திருப்பாதிரிபுலியூர் ஞானியார் சுவாமிகளிடம் தமிழ் பயின்றவர். பிறகு திருவையாறு தமிழ்க்கல்லூரியில் பயின்று தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, திருப்பனந்தாள் மடத்தில் ஆயிரம் ரூபாய் (ரூ. 1,000/-) பரிசையும் பெற்றவர்; நல்ல ஞாபக சக்தியுமுள்ளவர்.

இவர் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்ததுமுதல், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களின் செயல்களைக் கூர்ந்து கவனித்து வந்தார். மற்றவர்களிடமில்லாத தனித்தன்மை அவரிடம் இருப்பதை உணர்ந்து வியப்புறுவார்.

'செய்வனத் திருந்தச் செய்' என்பதை கண்ணாகப் போற்றுவதும், இல்லாமைஎன்னும் இன்னலிலிருந்துவிடுபட, வருவாய்க்கேற்ற எளியவாழ்க்கை வாழ்வதும், அதற்கேற்பச் செலவுகள் செய்வதுந்தான் அவர் உள்ளத்தைத்தொட்டன.

அவர் வாழ்க்கையின் நெறிமுறைகளைத் தாமும் பின் பற்ற விரும்பினார்.

''அவரின் ஆலோசனையின்படி வங்கியில் சேமிப்பைத் தொடங்கியதும், ஊரிலுள்ள நிலபுலன்களின் மூலமாக பெறும் வருவாயைச் சேமித்து வைத்ததுந்தான் ஓய்வு பெற்றிருக்கும் இன்றும் மிடியின்பிடியில் சிக்காது வாழ்வதற்கு தனக்கு துணைசெய்கிறது'' என்று நிறைவுகொள்ளுகிறது வித்துவான் சக்கரபாணி நாயகரின் உள்ளம்.

அதுமட்டுமின்றி தம்மகன் பொன்னம்பலவாணன் B.Com. படித்ததும் இந்தியன் வங்கியில் பணியாற்ற வேண்டும் என்று விரும்பியதும் அம்முயற்சிக்கு துணைநின்றதும் தம்

ஆப்த நண்பர் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்தான் என்ற எண்ணம், இன்றளவும் பசுமையாக வித்துவான் ஆர். சக்கரபாணி நாயகரின் உள்ளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இப்படி, குடும்ப நண்பர்களாகவே கருத்தொருமித்து வாழ்ந்துவரும் அவர்கள் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் போன்ற தமிழ் நூல்களின் அருமைபெருமை களைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால், தம்மை மறந்து நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்ற கருத்தினை மெய்ப்பிக்கும் அவர்கள் இலக்கிய ஆய்வு.

எத்துணையோ மாணவர்களின் உள்ளத்திற்கு ஒளி யேற்றும் தொண்டான ஆசிரியர்பணி, இருவரும் ஆயுள் முழுதும் நட்புடன் திகழும் வாய்ப்பினைத் தந்தது.

இப்படிப்பட்ட ஆசிரியர் பணியில் 32 ஆண்டுகள் பணி யாற்றியதே (சேர்ந்தது 28—6—1926, ஓய்வுபெற்றது 14—6—1959) தமக்கு நிறைவுதரும் பணியென்று பெருமிதம் கொள்கிறார் வித்துவான் மாசிலாமணி கிராமணி அவர்கள்.

★

## திருமணமும் மனையறமும்

1926-ஆம் ஆண்டு; ஆசிரியர் பணியில் அமர்ந்ததும் திரு. ம. மாசிலாமணி கிராமணி அவர்களுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று தீர்மானித்தனர் அவர் குடும்பத்துப் பெரியோர்கள்.

அதற்குத்தான் உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள் போலும்.

அவர்கள் விருப்பப்படியே உத்தியோகமும் கிடைத்தது. தாம் விரும்பிய ஆசிரியர் பணியில் போயமர்ந்தார். இதை அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் கொஞ்சங்கூட நம்பவில்லை.

''நேற்றுவரை இந்தச்சிந்தனையேயில்லாமல் கட்டிளங் காளை போன்று காண்போரைக் கதிகலங்கவைக்கும் தோற்றத்தோடு சிலம்பக்கூடம் வைத்து நடத்திய அவரா இன்று ஆசிரியராகப் பணியாற்றுகிறார்?'' என்று நம்ப மறுத்தனர் பலர்.

''அடக்கமும், பொறுமையும், கண்ணியமுமிக்க பணி யல்லவா அது? இவருக்கு பொருந்துமா?'' என்று கேட்டனர் சிலர்.

அனைத்து அம்சங்களோடு ஆசிரியர்க்குரிய சிறந்த தோற்றத்தோடு அவரைப் பார்த்த பிறகே எல்லோருடைய சந்தேகங்களும் தீர்ந்தன.

ஆசிரியர் பணியில் அவரது கவனம் முற்றிலும் திரும்பிய போது, திருமணம்செய்துவிடவேண்டும் என்று துரிதமாகச் செயல்பட்டனர் அவர்தம் குடும்பத்தினர்.

சிறிய தகப்பனார் சம்பந்தமூர்த்தி கிராமணி அவர் களுடன், சிறிய தாயார் இராமானுஜம்மாளும் பல இடங் களில் பெண் கேட்டு அறிந்து, கடைசியில் சென்னை பரசைவாக்கம் அருணாசல கிராமணியின் மூத்த மகள் நாகேசுவரி அம்மையாரை மணமகளாக நிச்சயம் செய்தனர்.

திருமணம் வெகு விமரிசையாக திருவொற்றியூர் நெடுஞ் சாலையிலுள்ள சோமசுந்தரம் செட்டியார் சத்திரத்தில் நடந்தது. சுற்றமும், நட்பும் சூழவந்திருந்து வாழ்த்தி நடத்திய அத்திருமணம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

திருமணத்தைத்தொடர்ந்து சிலநாட்கள் சிலசடங்குகள் நடைபெறுவதுண்டு கை நனைத்தல், விருந்துண்ணல்,

திருமணத் தேங்காய் உடைத்தல், புதுப்பானைத் துழாவுதல் போன்றவையே அவை.

பெண்ணையும், மருமகனையும், மற்றுஞ் சுற்றத்தாரையும் மணமகளின் வீட்டார் அழைத்துச்சென்று இரண்டொரு முறை விருந்திடும் வழக்கம் உண்டல்லவா? அதுபோல மணமகன் மாசிலாமணி கிராமணி அவர்களையும் நாகேசுவரி அம்மையாரையும் சுற்றத்தாரையும் விருந்துக்கு அழைத்துச் சென்றனர்.

முதல்நாள் விருந்து மச்சமாமிசம் இடம்பெறாத காய்கறி சமையலாகவே இருக்கும்.

இரண்டாம் நாள் மச்சமாமிசத்தைக்கொண்டு வகை வகையாக சமைக்கப்பட்ட சுவைமிகு பதார்த்தங்கள் விருந்தில் இடம்பெறும்.

அவ்வகையில் முதல் விருந்து முடிந்து, இரண்டாம்நாள் விருந்து தொடங்கியது. மணமகனோடு எல்லாரும் விருந்து உண்ண அமர்ந்தனர். இலையையிட்டு அன்னம்பரிமாறினர். முட்டை, மீன், புலால் போன்ற பதார்த்தங்கள் இலையைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டன.

மணமகன் மாசிலாமணி கிராமணி அவர்கள் உள்ளம் பகீரென்றது. தாம் கொண்ட லட்சிய விரதத்திற்கு வைக்கும் வேட்டு போலமைந்தது அந்நிகழ்ச்சி.

அதுவும் தன் மனைவியின் கையாலேயே பரிமாறச் செய்தது மிகவும் வேதனையளித்தது.

என் செய்வது? தனக்கென ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விருந்தை வேண்டாம் என்று வெறுப்போடு மறுத்து எழுந்துவிடுவது நாகரீகமற்ற செயலாகும். என்ன செய்யலாம் என்று தீவிரமாக சிந்தித்தார். அந்தத் தயக்கம் அவரது குடும்பத்தாருக்குக் குதூகலமளித்தது.

'இன்றுமுதல் புலாலும் மீனும் உண்ணத்தொடங்குவார்' என்ற அசட்டு நம்பிக்கை அவர்களுக்கு.

ஆனால், அவரது முடிவோ வேறு விதமாக அமைந்து இருந்தது.

''எல்லோரும் சாப்பிடுங்கள்; எனக்கு இப்போது கொஞ்சம் உடல் நலமில்லாதிருக்கிறது; சற்று தாமதித்து சாப்பிடுகிறேன்'' என்று உண்பவர்களிடம் பக்குவமாகச் சொல்லிவிட்டு எழுந்தார்.

இன்று இவற்றை உண்பார் என்று எதிர்ப்பார்த்திருந்த அவர் குடும்பத்தார்க்கு அச் செய்கை மிகவும் ஏமாற்றத்தைத் தந்தது.

பரிமாறிய மணமகளாகிய நாகேசுவரி அம்மையாருக்கு ஒன்றும்புரியாமல், குழப்பமும் கலக்கமும் மிகவும்வேதனையை ஏற்படுத்தின.

அன்று முழுதும் உடல்நலமில்லையென்ற காரணங்கூறி உணவைத் தவிர்த்துவிட்டார்.

கணவன் உண்ணாதபோது மனைவி உண்ணமுடியுமா? அவரும் அவ்வேளை உணவைத் தவிர்த்தார்.

திரு. மாசிலாமணி கிராமணியாரின் குடும்பத்தார்க்கோ இது மாபெருஞ் சங்கடத்தை ஏற்படுத்தியது. திருமதி நாகேசுவரியம்மையாரை அழைத்து, அப்போது அவர் கணவர் உண்ணாததன் காரணத்தை விளக்கினர்.

விவரமறிந்ததும் அவர்மனம்திடுக்கிட்டது. ''எவ்வளவு பெரிய லட்சியத்திற்கு மாறாக நானும் நடந்து கொண்டேன்'' என்று அறியாமல் நேர்ந்த தவறேயாயினும் மனம் மிகவும் வருந்தியது.

கணவரிடம் சென்று, ''மன்னியுங்கள்; தங்கள் உயர்ந்த லட்சியத்தை அறியாது தவறிழைத்துவிட்டேன். இனி தங்களுடைய சிறந்த நெறியையே மேற்கொள்வேன். இன்று முதல் நானும் மச்சமாமிசம் உண்ணாநோன்பை ஏற்கிறேன்'' என்று கண்ணீர் மல்க நா தழுதழுக்கக் கூறினார்.

தன்னைப்போன்றே அவர்தம் மனைவியும் அந்நிலையை மேற்கொண்டது மனநிறைவைத் தந்தது, ம. மாசிலாமணி கிராமணி அவர்களுக்கு.

''மாதர் பெறும் கல்வி; மனைதொறும் ஏற்றிவைக்கும் விளக்கு'' என்பது அவருடைய கருத்தாகும். எனவே தம் மனைவிக்குத் தாமே பல நூல்களைக் கற்பிக்கவேண்டும் என விரும்பினார். அதற்கொப்ப, கற்கும் ஆர்வத்தையும் ஏற்படுத்தினார்.

சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்க்ள் போன்ற பல நூல்களைக் கற்பித்தார். ஒவ்வொரு நூலையும் சிறப்பாகக் கற்றுத்தேறும்போது, பொன்னாலான அணிகலன்களைப் பரிசாகப்பெறுவார், திருமதி நாகேசுவரி அம்மையார்.

மின்னும் பொன்னைவிட உள்ளத்தே மிளிரும் கல்வியினால் அந்த அம்மையார் பெற்ற பயன் மனையறத்தைச் சிறப்புடையதாக்கியது.

அத்தகு சிறப்புமிகு மனையறத்தை மேற்கொள்ள வந்தபோது, அந்த இல்லத்தில் மழலை மொழிபேசி, தளிர் நடைபோட்டு கலகலப்பாக்கிக் கொண்டிருந்தது ஒரு குழந்தை. அந்தக் குழந்தையின்மீது குடும்பத்தினர் கொண்டிருந்த பாசத்தைவிட பன்மடங்கு அன்பு செலுத்தினார் திருமதி நாகேசுவரி அம்மையார்.

குழந்தை நலமுடன் ஓடியாடி மகிழும்போது தாமும் மகிழ்ந்து, சிறுநோய் கண்டு வாடினாலும் தாமும் துடித்துத்

துன்பமுறும் மென்மை உள்ளத்தோடு அன்பின் ஆழத்தைப் பெற்றிருந்தனர் திரு. மாசிலாமணி கிராமணி தம்பதியினர்.

அந்தக் குழந்தை வளர்ந்து தக்க வயதில் ஆசிரியர் பணியில் அமர்ந்ததைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தவரும் அத்தம்பதியரேயாவர். இப்படி அவர்களின் அன்புக் குரியவராகவும், ஆசிரியராகவும் விளங்கியவர், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் சிறிய தகப்பனார் மகனான திரு. M. S. பாலசுப்பிரமணியம் அவர்களே.

அன்பும் பண்பும் நிறைந்த அத் தம்பதியரின் மனையறம் நிராதரவாய் நின்ற சிலருக்குப் பேராதரவுதந்து அவர்களை வாழ்வித்தார்.

பாரியையிழந்த மக்களுக்கு (அங்கவை, சங்கவைக்கு) பார்போற்ற மணமுடித்து, பட்ட மகிஷியராக்கிய தமிழ்ப் பெருமூதாட்டி ஒளவையாரின் அருங்குணத்துக்கு ஒப்பானது இந்த வரலாற்று நாயகனின் பண்பு.

தம் சொந்தப்பணத்தில் திருமணத்தை தவிமரிசையாகச் செய்ததோடு நில்லாமல், நல்ல மதிப்புள்ள வீடு, நிலங்களை யும் அவர்களுக்கு உரிமையாக்கித்தந்த செயற்கரிய செயல், மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவியலா உயர் குணம் என்றே சொல்லலாம்.

இப்படி உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் மற்றவர்களை வாழ்வித்த நிகழ்ச்சிகள் எத்துணையோ உள.

1960-ஆம் ஆண்டு தங்கக் கட்டுப்பாடு திட்டம் செயல் படுத்தப்பட்டபோது, பழக்கமான பொற்கொல்லர்களில் சிலர் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களைச் சந்தித்தனர். தம் தொழில் நலிவினால் ஏற்பட்ட இன்னல் களை எடுத்துரைத்தனர்.

அதுகேட்டு அவருள்ளம் நெகிழ்ந்தது; பொன்னுகவும், பணமாகவும் அவர்களுக்குத் தன்னாலானவரைக் கொடுத்து உதவினார்.

தம் வாழ்வின் தேவைகளுக்குப் பணத்தை எண்ணி, எண்ணிச் செலவிட்ட வித்துவான் ம. மாசிலாமணிகிராமணி அவர்கள், பிறரை வாழவைக்க அள்ளி, அள்ளி வழங்கிய வள்ளண்மையும், தியாகசீலமும் வரலாற்றுப் பொன்னேடுகளில் குன்றா புகழ்மணக்க என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கும்.

★

## சரித்திரம் போற்றும் சமூகத் தொண்டு

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்பதை சமூகத்தில் உருவாக்க, ''கிராமணிகுல மகாஜன சங்கம்'' என்ற பெயரில் ஒரு சங்கத்தைத் தொடங்கி, தலைமையேற்று நடத்தினார், சமூகப் பெரியவர் த. விஜயதுரைசாமி கிராமணியார் அவர்கள்.

1934-ஆம் ஆண்டில் உறுப்பினராகி, அவரோடிணைந்து சமூகத்தொண்டில் தம் முழுக்கவனத்தையும் செலுத்தினா வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

ஏற்கெனவே பஞ்சாலய தரும பரிபாலன சபையில் இருவரும் இணைந்து சிறப்புடன் பணியாற்றிய அனுபவங்கள் இதற்கும் பொருந்தும் வகையில் அமைந்தன.

ஒரு நாள் இச் சங்கத்தில் ஒரு இளைஞரை வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களிடம் அறிமுகப்படுத்தினர் பெரியவர் த. விஜயதுரைசாமி கிராமணி அவர்கள்.

''இவர் மயிலை பொன்னுசாமி கிராமணியாரின் மகன். பெயர் 'ஞானம்' என்பது. பேசும் திறன் நன்கு அமையப் பெற்றவர். இவரும் சமூகத் தொண்டிலீடுபடுவது, நலம் பயக்குமல்லவா?'' என்றார்.

அவர் கூறிய அனைத்தும் பொருந்திய இளைஞர்தான் ஞானம். ஆனால், பெயர்தான் இந்துமதத்திற்கும், கிருத்துவ மதத்திற்கும் பொதுவானதாக இருந்தது.

திராவிட மாபாஷியகர்த்தர் சிவஞான முனிவர் என்னும் பெரியார் தென்மொழியிலும் - வடமொழியிலும் மிகப் பெரிய புலமைப்பெற்றவர்; பேரும், புகழுமிக்கவர்; சைவம் தழைத்தோங்க பாடுபட்டவர். அவரைப்போன்றே இவரும் சிறந்துவிளங்கவேண்டும் எனக் கருதி, 'சிவஞானம்' எனப் பெயரிட்டு அழைத்தார்.

அன்றுமுதல், ஞானம் 'சிவஞானம்' என்று அழைக்கப் பெற்றார். சில தமிழ் இலக்கியங்களையும் கற்கப்பெற்றார்.

இப்படி ஏற்பட்ட ம. பொ. சிவஞான கிராமணி, வித்துவான் மாசிலாமணி கிராமணி அவர்களின் தொடர்பு நாளடைவில் நட்பாக மலர்ந்தது.

திரு. ம. பொ. சிவஞான கிராமணி அவர்கள் சமூகத் தொண்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில், தேசியவாதியாகவும் இருந்தார். காலப்போக்கிலே தேசிய உணர்வோடு ஒன்றிவிட்டதால், மாற்றுக் கருத்துடைய ஜஸ்டிஸ் பார்ட்டியினரின் அச்சுறுத்தலுக்கும் அபாயங்களுக்குமிடையே எதிர் நீச்சலடிக்க வேண்டிய சூழ்நிலையேற்பட்டது அவருக்கு.

அச் சூழ்நிலைகளெல்லாம் அவரைச் சங்கடத்துக்குள்ளாக்காதவாறு பாதுகாப்புதந்தவர் வித்துவான் மாசிலாமணி கிராமணியும், அவரது மைத்துனர் திரு. த. சி. கங்காதர கிராமணியும் ஆவார்.

திரு. த. சி கங்காதர கிராமணிதான் இந்த வரலாற்று நாயகனின் தங்கையரான வடிவாம்பிகை, திருபுரசுந்தரி என்னும் நங்கையரை ஒருவருக்குப்பின் ஒருவராக மணம் புரிந்து வாழ்ந்தவர்.

1936 ஆம் ஆண்டு சென்னை நகராட்சித் தேர்தல் நடந்தது. திரு. P. R. கஜபதி நாயுடு அவர்கள் காங்கிரஸ் வேட்பாளராகவும், திரு. பார்த்தசாரதி நாயகர் அவர்கள் ஜஸ்டிஸ் பார்ட்டி வேட்பாளராகவும் போட்டியிட்டனர்.

அப்போது திரு. ம. பொ. சிவஞானகிராமணி அவர்கள் காங்கிரஸ்வேட்பாளர் திரு. P. R. கஜபதி நாயுடு அவர்களை ஆதரித்து, தீவிரமாகப் பிரசாரம் செய்தார்.

அப்பிரசாரத்தின் ஒரு பகுதி கிராமணிகுல மகாஜன சங்கத்தின் சார்பில் மாதமிருமுறை ஏடாக வெளிவந்து கொண்டிருந்த ''கிராமணிகுலம்'' என்னும் பத்திரிகையில் 1—10—1936-ல் வெளியாகி உள்ளது. அச்செய்தியை அப்படியே இங்கே தருகிறோம்.

''காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்தில் உங்களுடைய ஓட்டுக்களைப் பெறுவதற்காகமட்டும் உங்களுக்கு அதைச் செய்கிறோம்; இதைச் செய்கிறோம் என்று வாய்ப்பறை சாற்றவில்லை. நாட்டின் வறுமையை ஒழித்து 35 கோடி மக்களும் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகச் சென்ற 50 ஆண்டுகளாகக் காங்கிரஸ் அளவற்ற தியாகம் செய்துள்ளது. இன்னும் சுதந்திரம் பெறும்வரை எவ்வளவு தியாகம் வேண்டுமானாலும் செய்வதற்குக் காங்கிரஸ் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறது.

இது தேர்தல் காலம்; இக்காலத்தில் எத்தனையோ புதிய மனிதர்கள் புற்றீசல்போலப் புறப்படுவார்கள். உங்களுக்கு வேண்டியதை எல்லாம் சாதித்துக் கொடுப்பதாகவும் வாக்குறுதி அளிப்பார்கள். சிலர் உங்கள் டிவிஷனில்

விளக்குப் போடுகிறோம்; எனக்கு ஓட்டுப்போடுங்கள் என்பார்கள். இதற்கு நீங்கள் ஏமாந்து போகாமல் சுயராஜ்ய விளக்கு ஹிமாசல உச்சியிலிருந்து பிரகாசிக்கச் செய்யும் காங்கிரசுக்கே ஓட்டளியுங்கள். மற்றும் சிலர் ரஸ்தாப் போடுகிறேன் எனக்கு ஓட்டுப்போடுங்கள் என்பார்கள். ஆனால் சுயராஜ்ய தாகத்தைத் தீர்த்துக்கொள்ள சுதந்திர தடாகத்திற்குச் செல்லும் ரஸ்தாவில் அடக்குமுறை முள் நிறைந்திருக்கிறது. இம்முட்களைப்போக்க ரஸ்தாவைச் சீர்படுத்தி, சுதந்திர தடாகத்திற்கு வழிகாட்டும்காங்கிரசுக்கே ஓட்டளியுங்கள்; சுதந்திர விளக்குப்போடும் சாமர்த்தியம், சுதந்திர ரஸ்தாவைச் செப்பனிடும் தைரியம் வாய்ந்த காங்கிரசுக்கே ஓட்டளிக்க வேண்டுமென முதல் டிவிஷன் வாக்காளர்களாகிய உங்களை நான் வேண்டிக்கொள்கிறேன்'' என்றார்.

இத்தகைய தீவிரப் பிரசாரங்கள் எதிரணியினரை மருட்சிகொள்ளவைத்தது; மருட்சி, காழ்ப்புணர்வாக மாறி திரு. ம. பொ. சி. அவர்கள் உயிர்குடிக்கும் தீர்மானமாக உருப்பெற்றது.

விளைவு...?

பளபளக்கும் கத்தியுடன் கொண்டலு என்பவன் திரு. ம. பொ. சி. அவர்களைக் கொலை வெறியோடு எதிர்நோக்கியிருந்த நிகழ்ச்சி.

இச்சம்பவத்துக்கு முன்பாக, ஒருமுறை திரு. ம. பொ. சிவஞானகிராமணிக்கு துக்கம் தெரிவிப்பதுபோல் எல்லாருக்கும் புகையிலையை வழங்கினார்கள் எதிர்கட்சியினரின் கையாட்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, ம. பொ. சி. அவர்களுக்கு ஏதோ இடரிழைக்கப் போகின்றனர் மாற்று அணியினர் என்ற எண்ணத்தில் அவர் குடும்பத்தாரைப் பழைய

வண்ணாரப்பேட்டையிலிருந்து, தண்டையார்ப்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவில் குடியேற்றினர் வித்துவான் ம மாசிலாமணிகிராமணி அவர்களும், திரு. த. சி. கங்காதர கிராமணி அவர்களும். இடம் மாறினாலும் இடர் தீர்ந்த-பாடில்லை.

ஒருநாள் இரவு எட்டு மணி இருக்கும். திரு. ம. பொ சி. அவர்களும், திரு. த. சி. கங்காதர கிராமணி அவர்களும் கும்பாலம்மன் கோயில் தெருவில் பேசிக்கொண்டிருந்தனர். ஆசிரியர் பணிமுடித்து வித்துவான் ம. மாசிலாமணிகிராமணி அவர்கள் வீடு திரும்பியதும், அவரிடம் த. சி. கங்காதர கிராமணி சாப்பிடப்போவதாகச் சொல்லிவிட்டு வீட்டிற்குப் போய்விட்டார்.

பிறகு, ம. பொ. சி.யை அழைத்துக்கொண்டு பிள்ளையார் கோவில் தெருவிலிருந்து ம. பொ. சி. வீட்டிற்குச் செல்ல வித்துவான் ம. மாசிலாமணி கிராமணியும்; ம. பொ. சியும் கும்பாலம்மன் கோவில் தெருவிலிருந்து குறுக்காக திருவீதி யம்மன்கோயில் வழியாகப் போகும் திசையில் 'கொண்டலு' என்று கூப்பிடும் எச்சரிக்கை குரல் கேட்டது. ஒளிந்திருந்த உருவம் வெளியே வந்தது.

கையில் ஒருமுழம் நீளத்தில் பளபளக்கும் கத்தி ஒன்று இருந்தது.

'யார் நீ? எதற்காக வந்தாய்?' என்று வித்துவான் ம. மாசிலாமணி கிராமணியின் குரல்கேட்டுத் திரும்பினான் அக்கொடியவன். அத்திசையில் வந்துகொண்டிருந்த பப்ளாஸ் ராகவன் என்பவன் 'கொண்டலு' என்று குரல் கொடுத்தான். அக்குறிப்பையறிந்த 'கொண்டலு' மின்னல் வேகத்திலோடி மறைந்தான்.

'கொண்டலு' என்ற பெயருடைய அவன் யாராக இருப்பான்? எப்பகுதியைச் சேர்ந்தவன்? என யோசித்த்

போது, சஞ்சீவராயன்பேட்டையைச் சேர்ந்த ஒரு தெரு வில் வசிப்பவனாக இருக்கலாம் என்ற உத்தேசத்தில், உடனே தம் சகாக்களை அனுப்பித் தகவல் அறிந்து வரச் சொன்னார்.

தகவலறிந்து வந்தவர்கள் சொன்னதும், தன் நண்பர் திரு. வேதகிரி சாஸ்திரி B.A., B.L. வழக்கறிஞர் மூலமாகக் கேட்டறிந்தவையும் ஒத்திருந்தன.

''திரு ம பொ. சி. அவர்களின் உயிர் குடிக்க வந்த கொலைக்காரர்களே அவ்விருவரும்'' என்ற யூகம் உண்மை யாயிற்று.

''அன்று வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர் கள் மட்டும் இல்லாதிருந்தால், அந்தக் கொலைக்காரர்களின் கொடுவாளுக்குத் தப்பி வாழ்ந்திருக்கமுடியுமா? பலவகை யான முன்னேற்றங்களையும், பதவிகளையும் பெற்றிருக்க முடியுமா? இன்று தம்மைச் சூழ்ந்துள்ளவர்களின் வாயால் வாழ்க! வாழ்க என்ற வாழ்த்து முழக்கங்களைத்தான் கேட்க முடியுமா?'' என்ற எண்ணம் டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் உள்ளத்தில் என்றென்றும் நிலையாக வாழ்ந்துகொண்டிருக்கும்.

இப்படி, காங்கிரஸ் இயக்கத்தின் தீவிர ஈடுபட்டால் ம. பொ.சிக்கு ஏற்படும் ஆபத்துக்களைப் பார்த்த அவருடைய பெற்றோருக்கு 'திருமணம்' செய்தாலாவது மகனுடைய மனம் மாறாதா என்ற எண்ணம் ஏற்பட்டது.

அதை நடத்திவைக்கும் முயற்சியில் ஈடுபாட்டனர். வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி, திரு. த. சி. கங்காதர கிராமணி, திரு. தரணிசிங்கு கிராமணி ஆகிய மூவரும். திரு. ம. பொ. சி.யினுடைய அம்மான் சிவகாளத்தி கிராமணி அவர்கள் சம்மதத்தோடு, அவர் தம் குமாரத்தி இராஜேசுவரிஅம்மையார் மணமகளாக நிச்சயிக்கப்பட்டார்.

திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தத் திருமணத்திலும் ம பொ சி. அவர்களுக்குத் தேசியஉணர்வு மேலோங்கி நின்றது. மணமகன், மணமகள் உடையிலிருந்து பந்தல், கொடி அலங்காரம் வரை கட்டும் துணி கதர் மயமாகவே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார். அவர் விரும்பியபடியே திருமணம் நடத்திவைக்கப்பட்டது.

கிராமணி குல மகா ஜன சங்கத்தில் நிர்வாகியாயிருந்த போது. இதுபோன்று சமூகத்திற்கும், சமூகத்தவருக்கும் தொண்டாற்றியபோதிலும் முன்னோர் ஏற்படுத்திய தரும சொத்துக்களும் அறப்பணிகளும், தாறுமாறாக சிதறுண்டு கிடப்பதைப் பார்த்துப் பதைப்பதைத்தது இந்த வரலாற்று நாயகனின் உள்ளம்.

அன்று 'கிராமணிகுல மகாஜன சங்கத்தின்' கொள்கைகளை முழக்கும் ஏடாகத்திகழ்ந்த 'கிராமணி குலம்' என்னும் பத்திரிகையில் ''எங்கே?'' என்னும் தலைப்பில் எழுந்த வினாவும், அவ்வினாவுக்குரிய சந்தேகங்களும், வினாக் குறியின் வளைவைநீக்கி, நுனிகூர்மையாகி, சமூகத்தவரின் உள்ளத்தில் பாய்ந்து, உணர்வைத் தொட்டது என்பதனை அறியலாம்.

அதற்கான ஆதாரங்களைத் தேடிப் பெறுவதில் முழு மூச்சாக ஈடுபட்டார் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள். சமூகப் பெரியவர் த. விஜயதுரைசாமி கிராமணி அவர்கள் மூலம் பெற்ற தகவல்களும், ஆதாரங்களும் இவருடைய முயற்சிக்குப் பெரும் பயனளித்தன.

சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபை எந்த நோக்கத்திற்காக, எப்படி எப்போது ஆரம்பிக்கப்பட்டது? என்ற விவரங்களை வரலாற்றின் ஆரம்பத்திலேயே படித்தோம்.

அப்படி ஆரம்பிக்கப்பட்ட சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் ஒவ்வொன்றாக பிறரால் அபகரிக்கப்பட்ட போது, அவற்றை மீட்பதற்குச் சரியான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து, நிர்வாக சீரமைப்புக்கு வழிதேடினர் சபையின் நிர்வாக அங்கத்தினர்.

அதன்படி 1965-ஆம் ஆண்டில் திரு. T. S. உமாபதி கிராமணி B. A., L. T. அவர்கள் தலைவராகவும், கோஹூர் N. பாலசுந்தரகிராமணியார் செயலாளராகவும், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் கோஹூர் N. பாலசுந்தர கிராமணி அவர்கள் எங்கே? என்ற தலைப்பில் கண்ட சொத்துக்களைப்பற்றிய விவரங்களைச் சேகரிப்பதிலும், வழக்குதொடுக்கும் முயற்சிகளிலும் தீவிர கவனம் செலுத்தினார். அப்பணி வெற்றி காணுமுன்பே, திரு. கே என். பாலசுத்தரம் அவர்கள் திரு முருகன் திருவடியடைந்தார்.

அவர் மறைவுக்குப்பிறகு, செயலாளர்பதவிக்கு மீண்டும் நிர்வாகிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு. D. மாணிக்க வேலு B.Com., L.L.B. அவர்கள். திரு. T. S. உமாபதி B.A., L.T. அவர்கள் மறைவுக்குப்பின் மீண்டும் சபையின் நிர்வாகிகள்கூடி, 22—11—1972-ல் தலைவர் பதவிக்கு வித்துவான் திரு. ம. மாசிலாமணி கிராமணி அவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

அவர் தலைமையேற்ற பிறகு, இழந்த சொத்துக்களை மீட்கும் பணி மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. அச்சமயம் சபையிலிருந்தது அட்சய (வற்றாத) பாத்திரமல்ல, பிட்சா பாத்திரந்தான்.

இருந்த சொத்துக்களையெல்லாம் இழந்து சல்லிக்காசும் சபைக்கென இல்லாதபோது வழக்கு தொடுத்து வெற்றி

காண்பது எவ்வளவு சிரமம் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அந்நிலையில் அவர்கள் மேற்கொண்ட முடிவு ஒரு துணிச்சலான முயற்சி என்றுதான் சொல்லவேண்டும்.

''இடறினுந் தளரினும் உனகழல் தொழுதெழுவேன்'' என்றபடி எத்துணை இடர் வந்தாலும் இழந்த சொத்துக் களை மீட்டே தீருவது என்ற உறுதியோடு மகா சபையினர், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் தலைமை யில் அன்று (1965) தொடங்கிய தர்ம யுத்தம் இன்றுவரை தொடர்கிறது.

திருவொற்றியூர் சத்திரத்திற்காகப் போட்ட வழக்கு, ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கு நீதிபதி தன்னிச்சையாக நீதிமன்றத்தில் (தீர்ப்பில் அல்ல) கூறியுள்ள காரணங்கள் சமூக ரீதியாகவும், மனிதாபிமான அடிப்படையிலும் ஏற்கமுடியாததாக துரதிருஷ்டமான வகையில் அமைந்திருந்தன.

சான்றோர் சமூகத்தவருக்கு சந்நிதித்தெருவில் சத்திரம் இருக்க வாய்ப்பேயில்லை என்று கூற, தலைவர் ''அதே சந்நிதித்தெருவில் ஏகாலியருக்கும், நாவிதருக்கும் சத்திரங் கள் உள்ளன'' என்று கூறியதையும், சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களையும், உரிய சாசனங்களையும் கேட்கவும், ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்தவிதம் சமூகத்தவரின் உள்ளத்தில் பாய்ச்சப்பட்ட வேலாக நிலைத்துவிட்டது.

சான்றோர் சமூகத்தவர் ஆண்டவனை வணங்கும் தகுதி பெறாதவர்களா? ஆலயத்திற்கு அண்மையில் சத்திரம் கட்டும் தகுதியற்றவர்களா? தரும சிந்தனையில் மற்றவர் களுக்குத் தாழ்ந்தவர்களா? எந்த அடிப்படையில் அவர் உள்ளம் இந்தச் சமூகத்தை இழிவாக நினைத்ததென்றே தெரியவில்லை.

துலாக்கோல்போல் சமன்செய்து நீதி வழங்கவேண்டிய அவருள்ளம் ஏன் இப்படிப்பட்ட முடிவை மேற்கொண்டதென்றே தெரியவில்லை. 'நீதிதேவன் மயக்கம்' என்றே அதைச் சொல்லத் தோன்றுகிறது.

அத்தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல், அதன் மூலம் கிடைத்த படிப்பினைகளை அனுபவமாகக்கொண்டு மயிலாப்பூர் சத்திரவழக்கை நல்ல திறமையான வழக்கறிஞர் மூலம் நடத்தி வெற்றி கண்டனர்.

இவ்வழக்கை நடத்த எவ்வளவு பணம் தேவைப் பட்டது. எத்தனை வாய்தாக்கள் போடப்பட்டன. எத்தனை ஆண்டுகள் வழக்கு நடந்தது. அத்தனை முறையும் நீதி மன்றம் சென்றுவந்தவர்கள் எப்படிப்பட்ட இன்னல்களை யெல்லாம் ஏற்றிருப்பர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்!

இந்நிலையில் சமூகத்தின் நலிவை நீக்கப்பாடுபடும் சாதிச் சங்கமாக சபை இயங்கவில்லை யென்று சிலர் கருதினாலும், இழந்த சொத்துக்களை மீட்டு இயங்க வேண்டிய அறப்பணிகளை முறைப்படுத்தி பரிபாலனச் செய்வதுதானே பரிபாலனச் சபையின் முதற் பணியாகவும் முக்கியப் பணியாகவும் இருக்கமுடியும்.

இந்த லட்சியத்தின் ஈடுபாட்டிலுள்ள இன்னல்களை அனுபவித்தறியாத, புரிந்துகொள்ளமுடியாத சிலர், சபை என்ன செய்கிறதுயென்பதே புரியவில்லையென்று மிகச் சாதாரணமாகக் கூறிவிடுகின்றனர். சமூகப்பணியாற்ற எங்களுக்கு கொஞ்சம் பணம் கொடுத்துதவலாமேயென்றும் கேட்கின்றனர் சிலர். அதோடு நின்றுவிடவில்லை அவர்கள் எதிர்பார்ப்பு. சபை வென்றுள்ள மயிலைச் சத்திரத்திலும் கொஞ்சம் இடங்கொடுக்கலாமே என்று கேட்பதையும் தம் இயல்பாகக் கொண்டுள்ளனர்.

இது போன்ற அவர்களுடைய எதிர்ப்பார்ப்புகளை திருப்போரூரில் நடந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சியின்போது கோரிக்கையாகவும் விடுத்தனர்.

''பல்கி பெருகியிருக்கும் தனிநபர் சொத்தா கேட்டதும் எடுத்து கொடுப்பதற்கு''

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது சபையின தலைவருக்கு.

''இன்னும் எருமையே வாங்கவில்லை; நெய் நாழி என்ன விலையென்று கேட்பது போலிருக்கிறதே உங்கள் எதிர்பார்ப்பு'' எனச் சுருக்கமாகப் பதிலுரைத்தார்.

''பார்த்தீரா! பார்த்தீரா! சமூகத் தொண்டாற்றப் பணம் வேண்டும்; இடம் வேண்டும் என்று கேட்டால், எருமையென்று எங்களைத் திட்டுகிறார்'' என்று குறை பட்டுக்கொண்டனர் சிலர்!

அவர் அப்படி சொன்னது, நாம் வென்ற பிறகும் இன்னும் சபைக்கு வந்து சேரத் தாமதிக்கும் மயிலைச் சத்திரத்தைதான். அதைக்கொண்டுவந்துசேர்க்க, போட்ட வழக்குகள், நடந்த வாய்தாக்கள், அதற்கென செலவழித்த பெருந்தொகை(பணம்), மற்ற இன்னல்கள் இத்தனைக்கும் பிறகு, வெற்றிகண்டும்முற்றிலும் வந்து சேரத் தாமதப்படும் நிலை, இந் நிலையும் கடந்து வந்து சேர்ந்த பிறகு, புனரமைப்பின் மூலம் பொலிவுறச்செய்து, அதன் மூலம் தோன்றும் நிரந்தர வருவாயைக் கொண்டுதானே மற்ற சிந்தனைகளை மேற்கொள்ளமுடியும். இதைக் கருத்தில் கொண்டுதான் அவ்வுவமையைச் சொன்னார் தலைவர்.

எருமைக்கு இது பொருந்துமா? என்று கேட்பவர்கள் ஒரு கணம் சிந்தித்தால் அதன் நுட்பம் புரியும்.

இடமாறிய எருமை தனக்குரியது என நிருபணமாகி தாமதமாக வந்து சேர்ந்தாலும், அதைக் கட்டிக் காப்பாற்றி

நன்கு வளர்த்தபிறகு கருவுற்று, கன்றீந்து, பால்கறந்து, காய்ச்சி, புரையிடத் தயிராகி, தயிர் மோராகி, வெண்ணெயெடுத்துக்காய்ச்சியபிறகன்றோ மணக்கும் நெய்கிடைக்கும்! அதன்பிறகே, அந்நெய்யை வீட்டு உபயோகத்திற் கெவ்வளவு? விருந்துக்கு பயன்படுத்த எவ்வளவு? விலைக்கு விற்க எவ்வளவு என்று கணக்கிடும் நிலைக்கு வரமுடியும்.

இவற்றைப் புரிந்துகொள்ளப் பக்குவமில்லாதவர்களின் மனம் எத்தகைய விபரீதஎண்ணங்களை உருவகப்படுத்தின பார்த்தீர்களா!

மேற்கூறிய தொடர், நிலைமையைச் சூசகமாகச்சுட்டிக் காட்டிய வாசகம், மயிலைச் சத்திரத்தோடு முடிவதல்ல சபையின் லட்சியப் பயணம்; மேலும் தொடரும் என்பதை உணர்த்தவுந்தான்.

இப்படிச் சபையின் தலைவர், சமூகப் பெரியவர் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களின் லட்சியப் பயணத்தில் தம் ஒத்துழைப்பைத்தந்து அயராது பாடுபட்டு வருபவர் திரு. D மாணிக்கவேலு B.Com., L L.B. அவர்கள்

இவர், பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றபோது சபையின் கஜானா காலியாக இருந்தது என்பதை முன்பே அறிந்தோம். இன்று அந்நிலைமாறிக் கணிசமான நிதிநிலை இருப்பிலுள்ளது என்றால், அஃது ''இயற்றலும், ஈட்டலும் காத்தலும் காத்த, வகுத்தலும் வல்லது அரசு'' என்ற வள்ளுவர் வாய்மொழியைக் கடைப்பிடித்த அவர்தம் சீரிய செயற்பாடுகள்தான் காரணம் எனலாம்.

சமூகத்தின் செல்வந்தர்களை அணுகி ஆயிரக் கணக்கிலே நிதி வசூல்செய்து, ஏழைகளுக்கு அதுபரவலாக பயனுறாத வகையில் ''ஒரே நாள் விழா சிறப்பாக நடத்தி விட்டோம்'' என்று அத்தனையும் செலவழித்துப் பெருமை

காணும் சமூக பற்றுள்ளவர் மத்தியில் இவருடைய செயல் முறை வித்தியாசமாகத் தோன்றலாம்.

இவரைப் பொறுத்தவரை சமூகப்பணியென்பது நிரந்தர நன்மை பயப்பதாக இருக்க வேண்டும்; அதில் முன்னோர் களின் நல்லெண்ணமும் பிரதிபலிக்க வேண்டும்; அதற்கு மட்டுமே செலவிடப்படும் பணம் நியாயமுள்ளதாக இருக்கும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுள்ளவர்.

சபையின் வளர்ச்சிக்காக ஏற்றுக்கொள்ளப்படும் இன்னல்கள் எதுவானாலும் சற்றும் பின் வாங்காதவர்; எந்த மலை வந்தெதிர்த்தாலும் எள்ளளவும், சிந்தைமயங்காத் திடபுருஷன்.

திருவொற்றியூர் சத்திரத்திற்காகவும், மயிலை சத்திரத் திற்காகவும் தொடுக்கப்பட்ட வழக்குகளுள், திருவொற்றியூர் சத்திரம் சம்பந்தப்பட்ட வழக்கு மேல்முறையீடு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. இது அவ்வழக்கை நடத்த முன்வந்த வழக்கறிஞரின் மெத்தனமே காரணம் என்று சபை கருது கிறது.

"சட்ட நுண்ணறிவு இன்மையால்தானே திருவொற்றி-யூர் சத்திரத்தின் வழக்கில் இந்நிலை ஏற்பட்டது" என்று வேதனையுற்றது செயலாளரின் மனம்.

சபையின் நலம் கருதியாவது சட்டம் படிக்கவேண்டும் என்ற உறுதியை மேற்கொண்டார். அதன்படி சட்டம் படித்து தேர்வு பெற்றார் செயலாளர் திரு. D. மணிக்கவேலு, அவர்கள்.

எனினும் திறமையான நல்ல வழக்கறிஞர்களின் சீரிய செயற்பாட்டில் என்றும் அவர் குறுக்கிட்டதேயில்லை. மயிலை சத்திரவழக்கை மேற்கொண்டு நடத்திவரும் வழக்கறிஞரின்

திறமைமிகும் நல்ல செயற்பாடுகளில் இவர் எப்போதும் நம்பிக்கையும் மதிப்பும் வைத்துள்ளார்.

சபைக்கு ஊறுவிளைவிக்க நினைப்போரை இவர் லட்சியம் செய்வதே இல்லை.

இதனால், காழ்ப்புணர்வுகொண்ட சிலர் முச்சங்கங்களின் ஒருங்கிணைப்பு என்ற பெயரால் சபையின்வளர்ச்சிக்கு முடிவுகட்ட முயன்றனர். இதை முளையிலேயே கிள்ளியெறிந்த பெருமை சபையின் பொதுச் செயலாளரையே சாரும்.

இதுபோன்று சபையின் சீரழிவுக்கு முயற்சித்தவர்களுக்கு துணைநின்ற காரணத்தால், சபையின் நிர்வாகிகளில் சிலரை நீக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அதைச் செயற்குழுவில் பெரும்பான்மை இசைவோடும் தலைவரின் சம்மதத்தோடும் நிறைவேற்றிய துணிவு, செயலாளர் திரு. D. மாணிக்கவேலு அவர்களுக்கேயுள்ள சட்ட நுண்ணறிவின் திறன் என்றே சொல்லலாம்

இப்படிச் சபையின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் ஏற்ற வகையில் செயல்படும் பொதுச் செயலாளர் D. மாணிக்கவேலு B.Com., L.L.B., அவர்களின் நேர்மையான வழிமுறைகளை சட்ட ரீதியாகவும், நியாயமான அடிப்படையிலும் சந்திக்கவியலாதவர்கள், அவருக்குப் பலவகையிலும் தொல்லைதர முனைந்துள்ளனர்.

> 'ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
> பொன்றும் துணையும் புகழ்.'

என்பதற்கொப்ப அதைக் காலத்தின் தீர்ப்புக்குவிட்டு, ''என்கடன் பணிசெய்துகிடப்பதே'' என்னும் நோக்கோடு செயல்பட்டுவரும் அவர், செயலாளர் என்பவர் எப்படி இருக்கவேண்டும் என்பதைத் தாம் மேற்கொள்ளும் செயல்களின் மூலம் நிரூபித்துக்கொண்டிருக்கின்றார்.

சென்னை, தொண்டைமண்டலச் சான்றோர் தரும பரிபாலனச் சபையின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் ஏற்புடைய வகையில் சமூகப் பெரியவர், தலைவர், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள் மேற்கொண்ட லட்சியப்பணியில் இணைந்து நின்று தன் பங்கை சிறப்புடன் ஆற்றிவரும் பொதுச் செயலாளர் D. மாணிக்கவேலு B Com., L.L.B. அவர்களைப்பற்றி யறிந்தோம்.

அவரைப்போன்றே சபையின் பணிகளில் தலைவருக்குத் தம் பூரண ஒத்துழைப்பை நல்கிவரும் இணைச் செயலாளர் திரு. R. ஸ்ரீராமலிங்கனார் அவர்களின் தன்னலமற்ற சேவை, 'சபையின் வரலாறு' மறக்கமுடியாத ஒன்றாகும்.

சபையின் வழக்குகளுக்காக எண்ணற்ற முறை தலைவரோடும், பொதுச் செயலாளரோடும் தவறாது நீதிமன்றம் சென்று, வழக்கின் வெற்றிக்காகப் பாடுபட்ட பெருமை இணைச்செயலாளர் திரு. R. இராமலிங்கனார் அவர்களுக்கும் உண்டு.

வழக்கை நடத்துவதற்கே போதிய பணமில்லாதிருந்த அந்நேரத்தில், வழக்குக்காகும் போக்குவரத்து, பகலுணவு போன்ற செலவுகளை யார் மேற்கொள்வது? என்ற வினாவெழுந்தபோது, மார்தட்டி அவற்றைத் தாமே மேற்கொள்வதாக முன் வந்து இன்றளவும் அந்நிலையில் பின்வாங்காது செலவிட்டு வரும் பெருந்தகையாளர் திரு. R. இராமலிங்கனார் அவர்களே என்பதை சபையின் நிதிநிலை கணக்கு சான்று பகரும்.

இத்தகு இயல்பு பொருந்திய நிலக்கிழார் என்னும் வளமான குடும்பத்தைச்சேர்ந்த இவரைப்பற்றியும் வித்தியாசமாக விமர்சிப்பதில் பெருமகிழ்வு கொண்டனர் சிலர். ஆம்! தன்னை ஒப்பிட்டுப் பிறரைக் கணிப்பதில் தனித்திறன் கொண்டவர்கள் அவர்கள்.

அவர்கள் தம் கணிப்புகளில் மனத்தைப் பறிகொடுத்து, மயக்கமுற்று, முரண்பட்டு நின்ற ஒரு சில (சபை) நிர்வாகிகளுக்குத் தெளிவை யேற்படுத்த முயன்றார் சபையின் செயலாளர் திரு. D. மாணிக்கவேலு B Com., L.L.B. அவர்கள். தலைவர்தம் இசைவோடு செயற்குழுவைக் கூட்டித் திருத்தணி, திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மயிலை ஆகிய இடங்களிலுள்ள சபையின் சொத்துக்களைக்கவனித்து அவற்றின் சீர்திருத்தத்திற்கான பணிகளை ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

முரண்பட்டு நின்றமனம், பொறுப்பேற்க முன்வரவில்லை. என்னே விந்தை!

தரும பரிபாலனத்தை மேற்கொண்டிருக்கும் சபைக்குத் தீங்கு செய்ய விரும்புவது:

''அல்லவை செய்வார்க்கு அறங் கூற்றம் கூற்றமே
இல்லத்திற்றீங் கொழுகுவார்'' என்பதற் கொப்பானது.

எனவே தொன்மை நலங்கருதி, தொண்டின் சிறப்பு உணர்ந்து சபையின்பால் மிக்கவிசுவாசத்துடன் செயல்படும் தலைவர், பொதுச் செயலாளர், இணைச் செயலாளர் உறுதியாக இணைந்து நின்று, தம் பூரண ஒத்துழைபபை நல்கிவரும் நிர்வாகப் பெருமக்கள், திரு. C. சிவசங்கர கிராமணி B.A., திரு. சி. உமாபதி கிராமணி (உரிமையாளர் முத்தமிழ் அரசி அச்சகம்), திரு. V. கன்னையராஜா, திரு. M. S. பாலசுப்பிரமணிய கிராமணி, திரு. T. சுப்பிரமணிய கிராமணி (பட்டிக்காடு) திரு. ஆர். சோமசுந்தரம் (சோதிட நிபுணர்), திரு. M. சீனிவாஸ் B.Com.,, (C. A.) ஆகிய அனைவரும் அறம்போற்றும் அன்பு உள்ளங்கள் என நாளைய உலகம் வாழ்த்தும்; ஐயமில்லை.

இயலாமை கருதி நிர்வாகத்திலிருந்து தாமே விலகிச் சென்ற பெருமக்களையும் நன்றியுணர்வோடு நோக்கும்

பாங்குடையது சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபை.

சென்னைத் தொண்டைமண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபைப் பெற்ற அனுபவப் படிப்பினைகளைக் கொண்டு, சில நிபந்தனைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இனி, சபை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் சபைக்கு என்றும் விசுவாசியாக இருப்பாரா? சபையின் கௌரவத்தைக் கட்டிக் காப்பாற்றுவாரா? மனச்சாட்சி யுள்ளவரா? என்பதில் தெளிவுபெற்று, சபைஉருவாக்கியுள்ள உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிட்ட பிறகே சபை அவரை நிர்வாகியென அங்கீகரிக்கவேண்டுமென்பதே அந் நிபந்தனை.

சிவபெருமானால் தடுத்தாட்கொண்ட ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், சென்னைக்கடுத்த திருவொற்றியூரில் ஞாயிறு கிழார் மகள் சங்கிலியாரை மணந்தனான்று, மூவா மகிழடியை முக்காலும் வலம்வந்து, ''இவ்வொற்றியுரை விட்டு நீங்கேன்'' என்று கூளுரைத்துச் சில்லாண்டுகளுக் குப்பின் ''எத்தனைநாள் பிரிந்திருப்பேன் என் ஆரூர் இறைவனையே'' என்று திருவொற்றியூர் எல்லையைக் கடந்த போது, தம்பிரான் தோழராயிருந்தும் இரு கண்களும் மறைந்துவிட்டன. ஆதலால், அந்தத் திருவொற்றியீசுரர் மீது உறுதிமொழி கூறும் நிபந்தனையை விதித்தார் தலைவர்.

## உறுதிமொழி

''திருவொற்றியீசுவரர் திருவடி சாட்சியாக, சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபைக்கு எதிராக எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லையெனவும், மேற்படி சபையின் முன்னேற்றக் காரியங்களில் நான் உண்மையாகவும், விசுவாசமாகவும்

நடந்துகொள்வேன் எனவும் உறுதிகூறுகிறேன்'' என்று வாய்விட்டுச்சொல்லி, சபையின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் பதிவுசெய்து கையொப்பமிட வேண்டும் என்பது சபை ஏற்படுத்தியுள்ள உறுதிமொழி யேற்பு வைபவமாகும்.

இதன்படிதான நிர்வாகிகள் சிலர் தேர்வு செய்யப் பட்டனர் என்பதை சபையின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் காணலாம்.

பொன்னை உரசிப் பார்த்து அணிசெய்ய முற்படுவது போல், ஒருவர் தன்மைகளை அலசி ஆய்வுசெய்து, பிறகு தேர்வின்மூலம் நிர்வாகிகளாகச் சேர்க்கப்பட்டவர்களே திரு து. பெ. கனகசபை, திரு. ஆர். சண்முகவேலு, திரு. பா. திலகர், திரு. எஸ். முத்துகிருஷ்ணன், திரு. எம். சிவ குமார் B.E., ஆகியோர் என மனநிறைவோடு சொல்லுகிறார் சபையின் தலைவர் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

இப்படி ஒவ்வொன்றையும் சிந்தித்துச் சிந்தித்துச் செயற்படும்போதே பொதுச் செயலாளர், தம் மகன் களையும், உறவினர்களையும் சேர்த்துக்கொண்டார் என்றும் குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகின்றன. இவை சற்றும் பொருத்த மற்ற புன்மையுரைகள் என்பதையும் விளக்கிக் கூறினார் தலைவர்.

''இச்சபை சமூகத்தினரால் பொறுப்பேற்று நடத்தப் பெறுவது எனவே, நிர்வாகிகளாக இருப்பவர்கள், ஒவ்வொருவரும் சுற்றத்தாருள் ஒருவராக இருப்பது தவிர்க்கமுடியாத ஒன்று. அதுமட்டுமின்றி செயலாளர் தம் மகன்களைச்சேர்த்துக்கொண்டது அவருடைய சொந்த விருப்ப மல்ல; நிர்வாகத்தினரின் இசைவேயாகும் இம்முறையில் அவர் மகன்கள் நிர்வாகத்தில் சேர்க்கப்பட்டது சபைக்கு நன்மையே யென்பதை இரண்டொரு நிகழ்ச்சிகள்மூலம் அறியலாம்.

அன்று பயிலச் சத்திரம் சம்பந்தமாக நீதிமன்றம் செல்ல வேண்டியிருந்தது. நானோ, பொதுச்செயலாளரோ, இணைச் செயலாளரோ செல்லவியலாத அளவிற்கு உடல் நலமின்மை, தவிர்க்கமுடியாத, நெடுந்தூரப் பயணம் போன்ற எதிர்பாராத இடைஞ்சல்கள் தோன்றின.

அப்போது நீதிமன்ற நிகழ்ச்சிகளில் சபையின் சார்பில் பங்கேற்று நிறைவுசெய்தவர் பொதுச் செயலாளரின் மூத்த மகன் திரு M. சீனிவாஸ் B Com., (C. A,) அவர்களே யாவார். இது பொதுச் செயலாளரின் உத்தரவுப்படி அவர் ஆணையை மீறாது ஏற்றுச் சபையின் கடமையை நிறைவு செய்த சீரிய செயலாகும். இதைத் தவறென்று கொள்ள முடியுமா?

இளைய மகன் M. சிவகுமார் B E., அவர்களும் செயற் குழு கூடுவதற்குமுன், நிர்வாகிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்புவது, செயற்குழு கூட்ட நிகழ்ச்சிகளைப் பதிவேட்டில் கொண்டுவருவது போன்ற பணிகளில் M. சீனிவாஸ் B.Com (C.A.) அவர்களோடு உடனிருந்து உதவுகிறார். இப்படிச் செயலாளரின் பெரும்பணிகள் பகிர்ந்துகொள்ளப்படுவதால் அவருக்குச் சபையின் மற்றப் பணிகளில் தீவிர கவனம் செலுத்தும் வாய்ப்பு ஏற்படுகிறது என்று கூறினார்.

இத்தகு சிறப்புக்குரிய நிர்வாக அமைப்பை, முன்பு சிலர் ''இது கிழவர்கள் சபையென்று சொன்னார்களே!'' என்று சமூகப் பெரியவர், தலைவர், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்களைக் கேட்டபோது அவர் தந்த பதில் தம் உள்ளத்தின் உண்மையையும், திண்மையையும், தெளிவையும் பலருக்கும் உணர்த்தும் வகையில் அமைந்திருந்தது.

'கிழவர்கள் சபையென்று சொல்வதால் எனக்கொன்றும் வருத்தமில்லை. இச்சொல் முதுமையைமட்டுமே குறிக்கும் என்பதுதான் அவர்கள் எண்ணம். ஆனால் மேலும் சில

சிறப்புப் பொருளும் அதற்குண்டு என்பதை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

'கிழவன்' என்னும் சொல், கணவன் என்றும் பொருள் படும். அப்பொருள்பட நோக்குங்கால், சொன்னவரும் அவர் மனைவிக்குக் கிழவன்தான்! இல்லக்கிழத்தியர்' என்ற சொல்லிலிருந்தாவது கணவனுக்குரிய சொல்தான் தன் னெயுதிர்த்த 'கிழவன்' என்ற சொல் என்பதையுணர்ந் திருக்கலாம். அவ்வளவறிந்த பெருமனமாயிருந்தால், எள்ளி நகையாடும் இயல்பிராதே!

இச்சொல்லுக்கு மற்றுமோர் பொருளுமுண்டு. 'கிழவன்' என்பது, அனுபவம் நிறைந்த, பக்குவம்பெற்ற 'தலைவன்' எனவும் பொருள்படும். அதாவது தலைமைக்குத் தகுதி யானவர்; பொருத்தமானவர் என்பதுதான் அது.

தருமத்தைக் காக்கும் பரிபாலன சபைக்கு அனுபவமும், பக்குவமும், தலைமைக்குத் தகுதியும் பெற்றவர்கள் வேண்டுமா? மேற்கூறியவற்றுள் எதுவுமே இல்லாத எள்ளி நகையாடும் பிள்ளைப் பருவத்தினரைப் போன்றிருக்கும் விவரமற்றவர்கள் வேண்டுமா? ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்!

நன்மை, தீமைகளை அனுபவத்தாலறிந்து, ஆழமாக ஆய்ந்துரைக்கும் வார்த்தைகள், வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் என்பதால்தான், மூதுரையில் ''மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்'' என்ற நன்மொழி பொன்மொழியாக நம்மிடையே வழக்கத்திலிருக்கிறது.

மேலும் 'கிழவன்' என்ற சொல்லை 'முதுமை' என்னும் பொருள் கொண்டு பார்த்தாலும், முதியவர்கள் பங்கேற்கும் சபையின் நிர்வாகம், தரும பரிபாலன செயல்களிலிருந்து சற்றும் பின்வாங்கவில்லையென்பதை உறுதியாகச் சொல்ல முடியும். இதுவரை யாற்றியுள்ள பணிகளைப் பட்டியல்

போட்டுக் காட்டுகிறேன். வாய்ச் சொற்களை (வதந்திகளை பரப்புவதை) மட்டுமே மூலதனமாகக்கொண்டுள்ள அவர்கள் இவற்றுள் ஒன்றையாவது ஒழுங்காகச் செய்யமுடியுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

## சபை மேற்கொண்ட பணிகள்:

1 இழந்த சொத்துக்களைத் திரும்பப் பெற ஆதாரங்களைத் திரட்டியது.

2. இருப்பு நிதியாக ஒரு பைசாக்கூட இல்லாதிருந்தும் சொத்துக்களை மீட்கும் முயற்சிகளை மேற்கொண்டது.

3. முதல்முறையாக திருவொற்றியூர், மயிலை சத்திரங்களை மீட்க வழக்கு தொடுத்தது.

4. அவ்வழக்குகளுள் திருவொற்றியூர் சத்திர வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதனால் ஏற்பட்ட பணவிரயம். காலவிரயம், உடலுழைப்பு விரயம் போன்றவற்றைக் கண்டு சோர்ந்துவிடாமல் மீண்டும் நடவடிக்கை மேற்கொள்வது பற்றி சபை ஆலோசித்து வருகிறது.

5. மயிலைச் சத்திர வழக்கில் வெற்றிகண்டது. ஆனால் அதிலிருப்பவர் இன்னும் காலி செய்யாமல் நாட்களைக் கடத்திக்கொண்டு நீதிமன்றச் செலவைச் சபைக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். அவரும் கிராமணியே!

6. சமூகப் பெரியவர்களை கௌரவிக்கும் வகையில் சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சி., பன்மொழிப் புலவர். தெ பொ. மீனாட்சி சுந்தரனார், வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி, கலைமாமணி நாரணதுரைக் கண்ணனார் ஆகியோருக்குப் பாராட்டுவிழா நடத்தியது.

7. திருப்போரூர் சத்திரத்தில் குடியிருப்பவர்களைக் காலி செய்ய வழக்குப் போடப்பட்டுள்ளது.

8. திருப்போரூரிலுள்ள சபைக்குச் சொந்தமான தங்கப் பிள்ளையாருக்கு நித்திய பூசைசெய்ய மாதச் சம்பளத்தில் குருக்களை அமர்த்தியுள்ளது.

9. திருக்கழுக்குன்றத்தில் சிதைந்து கலனாகியிருந்த சத்திரத்தைப் பழுதுபார்க்கவும், மதில்சுவர் எழுப்பவும், மீண்டும் அது சிதைந்து போகாதவாறு காக்க சபையினரால் விரைவாக ஏற்பாடு செய்யப்பட்டுதுள்ளது.

10 பன்னிரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த திருப்போரூர் திருவிழா மீண்டும் தொடங்கியபோது, சென்னை தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபையின் சார்பில் நடத்தப்படும் விழாவான வேடர்பறி உற்சவத்தை 22—2—89 புதன் அன்று சிறப்பாக நடத்தி, விழாவைக் கண்டுகளிக்க வந்திருந்த சமூகத்தவருக்கும், அவர்தம் நண்பர்களுக்கும், உணவும் சிற்றுண்டியுமளித்து அன்புடன் விருந்தோம்பியது. தொடர்ந்து நடத்தும்வகையில் அத்திருப்பணி நமது சபையின் அறப்பணிகளின் வரிசையில் இடம்பெற்று உள்ளது.

11. சிவமேதவமென்று சிந்தித்துத் திருநீற்றுப் பெருமையை விளக்க வந்த சமூகச் சான்றோர், அறுபத்திருவர் அன்பெலாந்திரண்ட அருள்மிகு ஏனாதிநாத நாயனார் திருநட்சத்திரத்தை 8—10—1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அபிஷேக அலங்கார தூப தீப நைவேத்தியங்களுடன் வழிபாடு நடத்தப்பட்டது. (துண்டுப் பிரசுரத்தின் மூலம் சமூகத்தவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பலரும் பங்கேற்று இவ்வைபவத்தைச் சிறப்பித்தனர்) இத்திருப்பணியும் ஆண்டுதோறும் நிகழும் திருப்பணியென தீர்மனிக்கப்பட்டுள்ளது.

12. சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபையின் வரலாற்றைச் சமூகப் பெரியவர்,

சபையின் தலைவர் வித்துவான் ம. மாசிலாமணிகிராமணி அவர்களால் மிகச் சிறந்த முறையில் இயற்றப்பெற்று அச்சிடும் பணிமுடிந்து மிகத் துரிதமாக வெளியிடப்பட விருக்கிறது.

13. ஆலய அறப்பணிகளுக்கென முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றையும் தேடிக் கண்டு பிடித்து, செப்பனிட்டு இறைவன் வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் புனருத்தாரணம் செய்யும் முயற்சியிலீடுபட்டுள்ளது. (அவற்றுள் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோயில் இந்திர விமானமும் அடங்கும். இதன் செய்தியை சபை வரலாற்றுப் புத்தகத்தில் காணலாம்.)

14. மற்றுமுள்ள சபையின் சொத்துக்களை மீட்க வழக்கு தொடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

15. நம் கிராமணி குலத்தவருக்கும் பழங்குடி மக்களுக்கு வழங்குவது போன்று சலுகைகள் வழங்கவேண்டுமென்று மத்தியசர்க்காரோடு கடிதப்போக்குவரத்து நடத்தியது.

மேற்கூறியவை அனைத்தும் சபையின் தரும பரிபாலனத்திற்குள்ளடங்கிய பணிகள். இப் பணிகளுக்காகும் செல-வினத்தை ஈடுகட்ட இதுவரை யாரிடமிருந்தும் பெருந்தொகை எதையும் சபை நன்கொடையாகப் பெற்றதில்லை என்றும் கூறினார் தலைவர் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணியாரவர்கள்.

மேலும், 'சபை அடிக்கடி செயற்குழுவைக் கூட்டவில்லை' என்று குறை கூறியவர்கள் விளக்கம் பெறும் வகையில் தம் கருத்தைக் கூறினார். அது பல உண்மைகளைப் படம் பிடித்துக்காட்டுவது போலமைந்திருந்தது.

சபையின் பணிகள் ஒவ்வொன்றையும் மேற்கொள்ளும் போதும், அவை முற்றுப்பெற்று மற்றொன்றை மேற்

கொள்ளும் போதும் அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்கவும், திட்டமிடவும் ஆலோசிப்பதற்காகக் கூட்டப்படுவது தான் செயற்குழுக் கூட்டமென்பது.

இந்நிலையில் சபையின் கவனம் முழுவதும் மயிலைச் சத்திரத்திற்காக வழக்குத்தொடுத்து அதன் வெற்றிக்காக நாளிதுவரை அயராது பாடுபடும் வகையில் அமைந்திருந்தது. அவ்வழக்கை மேற்கொண்டு நடத்திவந்தவர்கள் சபையின் தலைவர், செயலாளர், இணைச்செயலாளர் என்பதை நன்கறிவர். தலைவரும், செயலாளரும்தான் செயற்குழுவைக் கூட்ட வேண்டியவர்கள். செயற்குழுவைக் காட்டிலும் மிகமிக முக்கியமானது வழக்கின் வெற்றி. எனவே செயற்குழுவை கூட்டுவது சற்று தள்ளிப்போடப்பட்டது.

இதுபோன்று குறை கூறியவர்கள் வழக்கை நடத்தும் போது உடன்வந்து கவனிக்கவோ, அதில் ஈடுபாடு கொள்ளவோ முன்வரவில்லை. பிறகு, செயற்குழுவைக் கூட்டி சில பொறுப்புகளைத் தர சபை முன்வந்தபோதும் தனக்கு அனுபவமில்லையென்றும், அதோடு தத்தம் வேலைகளைப் பாதிக்குமென்று கருதியும் ஒதுங்கிக்கொண்டார்கள் என்று மனவருத்தத்தோடு கூறினார் தலைவர் வித்துவான் ம. மாசிலாமணி கிராமணி அவர்கள்.

இப்படி சபையின் வளர்ச்சியிலும் வரலாற்றிலும் ஒன்றி நிற்கும் சமூகப்பெரியவர் தலைவர் வித்துவான் ம மாசிலாமணி அவர்கள். நல்லது எது நிகழ்ந்தாலும் அது தமக்குமட்டும் நன்மை பயப்பதாக இருக்கக்கூடாது. சமூகத்திற்கும், உலகத்திற்கும் பயனுறும் வகையில் அமையவேண்டும் எனும் பெருநோக்கு கொண்டவர். இதை மெய்ப்பிக்கும் நிகழ்ச்சியொன்று அருள்மிகு ஏனாதி நாத நாயனார் திருநாளின் போது நிகழ்ந்தது.

அன்று நிகழ்ந்த வழிபாட்டில் தலைவர் முன்பாக அர்ச்சகர், தலைவர் நலனுக்காகவும் அவர் குடும்பத்தினர்

நலனுக்காகவும் இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென வடமொழியில் (மந்திரம்) சங்கற்பம் செய்தார். தலைவர் அதைத்திருத்தி, சமூக நலத்திற்காகவும், நாட்டு நலத்திற்காகவும், உலக நலத்திற்காகவும் இறைவன் அருள்பாலிக்க வேண்டுமெனச் சங்கற்பம் செய்யச்சொன்னார்.

இப்படி, தன்னலங்கருதாது சமூகம், நாடு, உலகம் என பொது நலநோக்கோடு விளங்கும் சரித்திர நாயகன் இந்தச் சமூகத்தில் தோன்றியது சான்றோர் சமூகம் பெற்ற பாக்கியம் என்றே கூறலாம்.

## எழிலோவியப் படைப்புகளும் எழுத்தோவியப் படைப்புகளும்

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்

தங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றே யறிந்தேன்.

பாரதி கண்ட கனவில் வந்த அழகு
தெய்வத்தின் தோற்றம் இது.

இந்த வரலாற்று நாயகனின் கற்பனை வளமோ தன்னைப் புலமைப் பெறச்செய்த தாய்மொழிக்கு, அன்னை தமிழுக்கு கலைக் கோயில் அமைத்தது தம் உள்ளத்தே.

அன்னை பெற்ற அணிகலன்களை (இலக்கியங்களை) யெல்லாம் அங்கமெலாமணிவித்து அழகு ஓவியமொன்று படைத்து தமிழ்த்தாயென வணங்கினார்.

சூடாமணி, சூளாமணி, ஆத்திசூடி, சித்தாந்த சிகாமணி, சச்சபுடம், திருவாய்மொழி, பொய்யாமொழி, குண்டலகேசி, நீலகேசித் திரட்டு, நீலகேசி, நெஞ்சுவிடு தூது, தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப்ரபந்தம் நித்திலக் கோவை, வியாழ மாலை, மயேசுரர் யாப்பு, திருவுந்தியார், வளையாபதி, கயாகரம், சிவாகரம் யசோதர காவியம், மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் தான் அன்னையின் உடல் அங்கங்களாகவும், அணிகலன் களாகவும் உள்ளன என்பதை தமிழ்த்தாயின் திருவுருவப் படத்தைப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த மனமும் ஓவியங் களைத் தீட்டித் திறன்பெற்ற கைவண்ணமும் இணைந்து உருவாக்கிய இணையற்ற இவ்வோவியம் தமிழ் வாழும் பல்லோருள்ளங்களை ஈர்த்தது.

சென்னையில் நடத்தப்பெற்ற தமிழ்நூல் கண்காட்சியில் இவ்வோவியம்வைத்துச் சிறப்பிக்கப்பட்டது.

முரசபந்தம், இரட்டை நாகபந்தம், சுழிகுளம், எட்டாரைச் சக்ரம், புஷ்பமாலிகாபந்தம் போன்ற பல சித்திர கவிகள் இவருடைய ஆற்றல்மிக்க படைப்புகளுக்கு எடுத்துக் காட்டுகளாய்த் திகழ்கின்றன.

எட்டாரைச் சக்கரம் என்பது ஐயா அவர்கள் தம் ஆசான், பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களைப் பற்றி இயற்றிய சித்திரக் கவியாகும்.

க்ஷத்திரிய மித்திரன், கிராமணிகுலம் போன்ற சமூகப் பத்திரிகைகள் இவருடைய எழுத்தாற்றலின் பயன்பெற்று மிளிர்ந்தவை.

தனிக் கவிதைகளாகப் பலவும், சாற்றுக்கவி, சரம கவியாகவும் வாழ்த்துப்பாக்களாகவும் பல கவிகளையும் இயற்றியுள்ளார்.

அவற்றுள் :

பாராதி யையீன்ற வன்னம் படைத்தும் நற்
பாண்டியற் காகவன்று
பார்மீதில் வையைத் திருகோட்டில் பருப்பிட்
டுதிர்த்த ருந்தி
சாராதி ருக்குமறு நெய்யாடு மேனியில்
மாற்றடிப் பட்டவ்விடை
சார்மனங் குழம்புவா சகனார்க் கருள்செய்யும்
பரமன் குமரா!
தேராத வென்னுளங் குழைந்து பரமானந்த
ரசம் பாயசம் பூதி
தீர்க்குநின் றாள்காட்டி வினைவேரைக் கத்திரிக்
காய் கோப மதனையே
தீராத மும்மலஞ் சுண்டைக்காய் புலவேட
ரவரைக்காய் முன்ன மோர்
வேதாச லத்தனருள் தணிகாச லத்துள்வளர்
மாசிலா மணித் தெய்வமே

என்னும் பாடல் 'கிராமணிகுலம்' விகடப் பகுதியில் வந்த தாகும். தமிழ்த்தெய்வம் ஆகிய முருகப் பெருமானை வணங்கிய போது, அவர் சந்தோஷப்பட்டு, 'விகடரே அன்னம், பருப்பு, நெய், குழம்பு, ரசம், பாயசம், காய்கறி தினுசு, மோர், எங்கப்பன் பேர், உங்கப்பன்பேர், என்பேர், உன் பேர் வரும்படியாக ஒரு பாட்டுப் பாடு என்று கேட்டதற்கு இயற்றப்பட்ட கற்பனைப் பாடல்.

இப்படிக் கட்டுரை, கவிதை, நகைச்சுவைபோன்ற பல பகுதிகளைச் சிறப்பாக எழுதி பலருடைய பாராட்டுகளையும் பெற்றார். இவற்றுள் எங்கே? என்ற தலைப்பில் எழுதப் பெற்ற தொடர் சமூகத்தின் தரும சொத்துக்களை மீட்கத் தோன்றிய தடயமாக இன்னும் பயன்பட்டு வருகின்றது.

பக்தி இலக்கியங்களின் ஈடுபாட்டில் மிக்க மனநெகிழ்ச்சி கொண்டவர். எனவே சில பக்தி இலக்கியங்களுக்கும் இவர்

உரையெழுதிச் சிறப்பித்திருக்கிறார். இவற்றுள் மீனாட்சியம்மன் கலிவெண்பா விரிவுரையும், கந்தர் சஷ்டி கவசம் விரிவுரையும் அடங்கும்.

சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள அங்காள பரமேஸ்வரி கோயில் கும்பாபிஷேகத்தின்போது அம்மன்மீது பாடிச் சிறப்பித்ததற்காகச் செட்டிநாட்டரசர் ராஜா சர் முத்தையா செட்டியாரவர்களால் பொன்னாடைப் போர்த்தப்பெற்று கௌரவிக்கப்பட்டார்.

இப்படிப் பக்தி இலக்கியங்களினீடுபாட்டில் மிக்க ஆர்வம் உள்ளவரென்றாலும் மற்றத் துறைகளிலும் அவரது எழுத்துப் பணி தொய்வுறாது தொடர்ந்து கொண்டுதானிருந்தது.

அவற்றுள் ஒன்று பாஞ்சாலங்குறிச்சி சிங்கம் கட்டபொம்மன் வரலாறு. வெள்ளையனுக்கு இவனோர் சிம்மசொப்பனம். இவனுடைய வீரமுழக்கத்தை அப்படியே படம் பிடித்துக்காட்டுவதுபோல் பாடல்களில் 2310 கண்ணிகளாக தொகுத்தார். கட்டபொம்மனின் வீர முழக்கம் இக்காலச் சந்ததியினரின் காதுகளில் பரவலாக ஒலிக்கு முன் இப்பாடல் இயற்றப்பெற்றது. அப்பாடல்களை முழுமையாக இங்கு வெளியிடமுடியவில்லையாயினும் அதன் சிறப்பை வாசகர்கள் உணரும்வகையில் 1792-ஆம் கண்ணியிலிருந்து 1810-ஆம் கண்ணிவரை இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளையரின் குள்ளநரித் தந்திரங்களையெல்லாம் முறியடித்துவீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டப்பொம்மன், மேஜர் ஷெப்பர்டு மெக்காலே துரையின் சூழ்ச்சியையும் முறியடிக்கிறான். (இது தேசிங்கு ராஜன் பாடலைப் போன்றது)

## பாடல்

மேஜர் ஷெப் பர்டு மெக்காலேதுரையு மேலே
யோசித்தான்
பட்டாளத்தலைன் கிராண்டுதுரையோடு படையொடு
புறப்பட்டான்

பாஞ்சாலங்குறிச்சி நோக்கியேபடைகள் பாங்காய்
வருகுதுபார்
கருந்தூள் செந்தூள் எழும்புதுபாரு கம்பெனி
படைகளிலே
எட்டுமைலுக் கிப்பாலுள்ள ஒட்டாரப் பட்டியையே
அடைந்தேமறுநாள் பசுவந்தனையில் அடித்தார்
கூடாரம்
பசுவந்தனையில் நகாரடித்தே படைக ளிறக்கினூர்கள்
படைகள்வந்ததைக் கண்டானையா பாஞ்சை
யிளஞ்சிங்கம்
உதட்டைக்கடித்தே யுறுமியெழுந்தா னூமைத்
துரைச்சிங்கம்
கையொடுகையை யறைந்தானையா கட்ட
பொம்முதம்பி
தலையையசைத்தே மீசைமுறுக்கினான் தம்பித்
துரைச்சிங்கம்
அட்டமங்கலக் குதிரையேறினான் அழகிய
துரைச் சிங்கம்
மீனக்கொடியைக் கையிலெடுத்து மேலே
யுயர்த்திநின்றான்
வலக்கைதன்னில் வாளையேந்தி வலமாய்த்
திரித்தானே
குறிப்புக்காட்டிப் புரட்சிவீரரைக் கூவி யழைத்தானே
கூட்டங்கூட்டமா யறுநூ றுபேர்கள் கூடி விட்டார்கள்
ஜெகவீரபாண்டிய கட்டபொம்முக்கு ஜேஜே
வென்றார்கள்
தூங்காவுள்ளத் துரைசாமிக்கு ஜேஜே வென்றார்கள்
கும்பினிப்படையைக் கூட்டமாய்வந்து சூழ்ந்து
கொண்டார்கள்

அச்சாகி புத்தக வடிவில் வந்திருந்தால் இப்பாடல் முழுதும் இன்றைய தமிழ்நாடு அரசின் பரிசையும் பாராட்டு களையும் பெற்றிருக்கும்!

வயது தொண்ணூற்றைக் கடந்து தொன்மை நலம் வளர்க்கும் பெரியவர், சமூகத்தின் சரித்திர நாயகர். இன்று நமக்குப் படைத்திருக்கும் வளமிக்க நூல் மிக விரைவில் உங்கள் கரங்களில் மிளிரவிருக்கிறது. சென்னைத் தொண்டைமண்டலச் சான்றோர் தரும பரிபாலன சபையின் வரலாற்று நூல்தான் அது, எவ்வளவு சிறப்பானது என்பதை நூலைப் படித்துணருபவர்கள் நன்கறிவர்.

இத்தகு சிறப்புச் சாதனைகளுக்குரிய சரித்திர நாயகர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும், அதற்குப்பின்பும், அவரிடம் பயின்று பலன் பெற்று, பெரிய பெரிய பதவிகளை வகித்து சிறப்புடன் வாழ்ந்துவரும் மாணவமணிகள் பலர் அவருக்குண்டு. அம்மாணவமணிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளும் தகுதி எனக்கில்லையாயினும், அம்மாமேதையிடம், தமிழ் வழங்கிய தாதாவிடம், இலக்கிய நலமருளிய இறைவனிடம் நானும் பயின்றேன் என்றபெருமை எனக்கும் உண்டு. அதை எடுத்துக் கூறும் இனிய நிகழ்ச்சிகளைக் கொண்டதுதான் அடுத்தபகுதி.

## ஐயன் எனக்களித்த அழியாத செல்வம்

இந்நூல் தொடக்கம் முதல், இப்பகுதியைத் தொடங்கும் வரை என் ஆசான் அவர்களை, அவர்தம் வாழ்நாட்களில் படிப்படியாகப் பெற்ற வயது மதிப்பீடுகளின்படி, மழலைப் பருவத்தில் மாசிலாமணி என்றும், மாணவர் மாசிலாமணி, திரு ம. மாசிலாமணி, திரு. ம. மாசிலாமணி கிராமணி, வித்துவான் ம. மாசிலாமணி, சமூகப் பெரியவர், சான்றோர் சமூகத்து சரித்திர நாயகன் என்றும், வரலாற்று நாயகன் என்றும் பெயரிட்டு எழுதிவந்துள்ளேன்.

இப்பகுதி 'ஐயன்' என்னை மாணாக்கனாக ஏற்றுக் கொண்ட பகுதி. 'ஐயன்' என்ற சொல் அரசன் - அரிகர புத்திரன், அருகன், அழகுடையவன், ஆசிரியன், உயர்ந்

தோன், கடவுள், குரு, சிவன், தந்தை, தமையன், தலைவன், மூத்தோன் எனப் பல சிறப்புப் பொருள்களைத் தரும்.

'ஐயன்' என்ற சொல்தான், விளிச்சொல்லாக வரும் போது, 'ஐயா' என்று மதிப்புக்குரியதாக மாற்றம் பெறுகிறது.

என்னைப் பொருத்தமட்டில், என்றென்றும் அவரை நான் ஐயா என்றுதான் அழைப்பது வழக்கம். எனவே, இப்பகுதி முழுதும் 'ஐயா' என்ற சொல்லே வழங்கும் என்பதை தொடர்ந்து வாசிப்போர்க்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று என் மைத்துனர் பா. திலகருக்கும் தேவிகாவுக்கும் திருமணம். வாழ்த்துரை வழங்க ஐயா அவர்களையும், கலைமாமணி நாரணதுரைக்கண்ணனார் அவர்களையும் அழைத்து வந்திருந்தார் மைத்துனர் திரு D. மாணிக்கவேலு B.Com., L.L.B., அவர்கள்.

பிறகு, என் மகள் தனலட்சுமிக்கும் ந. சீனிவாசனுக்கும் நிகழ்வுற்ற திருமணத்தின் போதும் ஐயா அவர்கள் நேரில் வந்து வாழ்த்தினார். இப்படி திருமண நிகழ்ச்சிகளின் போது மட்டுமே அவரை ஆபூர்வமாக சந்திக்கும் வாய்ப்பு ஆரம்பத்தில் ஏற்பட்டது.

தொன்மை நலங்காட்டும் தோற்றம் - பண்பின் நலங்காட்டும் பழகும் முறை; நீறணிந்த முகம்; நிமலனைத் துதிக்கும் நெஞ்சம்; தித்திக்கும் தமிழில் வித்துவான் என பெற்ற பட்டம் இத்தனைக்கும் உரியவராக திகழ்ந்தாரவர்.

ஆழ்ந்த ஞானமும், அனுபவ முதிர்ச்சியும் பெற்ற இவரிடம் தமிழ் பயிலும் பாக்கியம் எனக்குக் கிட்டுமா? என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

ஒரு நாள் என் மைத்துனர் திரு. D. மாணிக்கவேலு B.Com , L L,B. அவர்களை சந்தித்தபோது ஐயா அவர்கள் எனக்குத் தமிழ் கற்றுத்தர இசைவாரா? நேரம்கிடைக்குமா அவருக்கு என்று கேட்டேன்.

'தடையேதும் இன்றி சொல்லித் தருவார்' அன்பு உள்ளம் கொண்டவர் அவர். 'ஆசான்' எனப்பழகும்போது நீங்களே தெரிந்துகொள்வீர்கள் என்று எனக்கு நம்பிக்கை யூட்டினார்.

மறக்கமுடியாத அந்த இனிய நிகழ்ச்சி ஆரம்பமானது குயப்பேட்டை, கந்தசாமி கோயில் தெருவிலுள்ள என் மைத்துனர் வீட்டில்தான். 'ஐயா' தங்களிடம் தமிழ் பயில விரும்புகிறேன். என்னை மாணாக்கனாக ஏற்றுக்கொள்வீர்களா என்று வேண்டினேன்.

'தமிழைத் தரவா மறுப்பேன்? இன்றே பயிற்சியைத் தொடங்கலாமே' என்றார் இசைவு கிடைத்தது அந்த தெய்வத்தின் திருவாய் மொழியிலிருந்து. திருவடிகளில் வீழ்ந்து வணங்கினேன். 'காணிக்கை செலுத்தாது கற்பது முறையற்றது' என உரைத்தது உள்ளம்.

மிகச் சிறிய தொகையைத் தட்சிணையாக வைத்து, 'ஐயா' மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வேண்டினேன். என் மனநிறைவுக்காக ஏற்கொண்டாரே தவிர, மகிழ்ச்சியில்லை அவருக்கு.

'நாடிவரும் மாணவர்களிடம் காசுபெற்று கல்வி போதிக்கும் வியாபார நோக்கம் எப்போதும் இருந்ததில்லை எனக்கு; இனியும் இருக்காது. உங்களிடையே பொங்கிப் பிரவகிக்கும் ஆர்வமே நீங்கள் எனக்குச் செலுத்தும் காணிக்கை; அதனால் உங்களுக்கு பயனுண்டு; எனக்கும் கற்பித்ததனால் ஏற்படும் நிறைவு உண்டு' என்று கூறினார்.

காசைக் காணிக்கையாகப் பெற விருப்பாத அந்தக் கருணாமூர்த்தியிடம் நான் வேண்டிப் பெற்ற வரம் ஒன்று உண்டு; அதுதான் ஆண்டுதோறும் அவர் பிறந்த நாளின் போது, மாலையணிவித்து, திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நல்லாசி பெறும் பாக்கியம்; அதற்குமட்டும் ஐயாவிடம் அனுமதி கிடைத்தது.

இப்படி ஐயாவுக்கும் எனக்குமிடையே நிகழ்ந்த உரையாடலுக்குப் பிறகு பயிற்சி ஆரம்பமானது. இரண்டு மூன்று நாட்கள் அங்கேயே தொடர்ந்தது. பிறகு சிந்தாதிரிப் பேட்டை வெங்கடேச கிராமணித் தெருவில் ஐயா வாழ்ந்த இல்லத்தில் தொடர்ந்தது.

முதலில் பக்தி இலக்கியங்களிலிருந்து பயிற்சி ஆரம்பமானது. திருக்கருவை வெண்பா வந்தாதி, திருக்கருவை கலித்துறை யந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, அருணகிரியந்தாதி, நால்வர் நான்மணி மாலை, சோண சைல மாலை, திருவேங்கட மாலை, இறையனார் அகப் பொருள் போன்ற இலக்கியங்களிலும் நன்னூல், நம்பி அகப் பொருள், யாப்பிலக்கணம் போன்ற இலக்கணப் பாடங் களிலும் சிறப்பான பயிற்சி தந்தார்.

ஒவ்வொன்றையும் பன்முறை விளக்கிக்கூறி, பாங்குற மனத்தில் அமையும் வண்ணம் கற்பிப்பதில் அக்கறை கொள்ளும் ஐயா அவர்களைப்போன்ற ஆசிரியர் பெருமக்கள் இன்று எத்துணைப்பேர் இருப்பர் என்று எண்ணிப் பார்க் கிறேன். வியப்புத்தான் மேலிடுகிறது.

பக்தி இலக்கியங்களைக் கற்பிக்கும்போதும், இறைவ னின் அளப்பறிய ஆற்றலை விளக்கும்போதும், அனைத்தும் மறுக்கமுடியாத தத்துவார்த்தங்களாகவே தோன்றும்.

அன்று பக்தி இலக்கியங்களுள் ஒன்றான திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதியில் 20-ஆம் பாடல் பாடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்பாடலுக்கு விளக்கவுரை

சொல்லும்போது இன்னும் சில பாடல்களை மேற்கோளாக எடுத்துக்காட்டினார்.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
 இயமான னாய் எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
 ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
 பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
 நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

இத்திருவாசகப் பாடலின்படி, இறைவன் தோற்றத்திற் குரிய உருவாயும், நிலம், நீர், நெருப்பு, கதிரோன், நிலவு, ஆகாயம் என திருவுருவாயும், ஆன்மா, காற்று, காலம் போன்ற காட்சிக்கு அமையாத அருவாயும் உறைபவன் இறைவன்.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனின் அன்புமயம், அருள்மயம், ஆட்சிமயம் என அனைத்துமாய் விளங்கும் அற்புதத்தை விளக்கினார் ஐயா அவர்கள். முன்பு இறைவனைப்பற்றி ஒரு சிலர் பேசியதைக் கேட்டு என்னுள் பதுங்கியிருந்த பல குழப்பங்கள் இப்போது ஒவ்வொன்றாக விடைபெற்றுச் சென்றன.

'தென்னாடுடைய சிவனே போற்றி, என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்னும் மாணிக்கவாசகப் பெருமானின திருவாசகக் கருத்தினை அன்று வேடிக்கையாக விமர்சித்தவர் கள் உண்டு.

'தென்னாடுடைய சிவன் எந்நாட்டவருக்கும் இறை-வனா'?

ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற கண்டங்களில் வாழும் எல்லா மக்களுக்கும் இக்கூற்று

பொருந்துமா? எல்லா நாடுகளிலும் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் வாழ்கிறார்களே! கிருத்துவர்களின் இறையொழுக்கம் வேறு; முஸ்லிம்களின் இறையொழுக்கம் வேறு அல்லவா? இந்நிலையில் தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பது எப்படிப் பொருந்தும்?' என்று நகைச்சுவையோடு பேசிக் கேட்போரின் உள்ளத்தை ஈர்த்து, ஆரவாரமிக்க கைத்தட்டுதலைப் பெற்ற அன்றைய நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது.

அன்று எனக்கு குழப்பத்தை ஏற்படுத்திய இப்பேச்சு, இன்று மிகச் சாதாரணமாகத் தோன்றுகிறது.

மாணிக்கவாசகப் பெருமானின் தீர்க்கமான தெளிவான இறை வணக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாத மனக் குழப்பமே, நகைச்சுவையாளரின் கேள்வியும், ஐயமுமாகும்.

தாம் வணங்கும் இறைவனை, தென்னாடுடைய சிவனே! என்று போற்றிய மாணிக்கவாசகப் பெருமான் 'என்னாட்டவர்க்கும்' என்று குறிப்பிடும்போது சிவனே என்றுசொல்லாமல் 'இறைவா' என்று பொதுப் பெயரிட்டே போற்றுகிறார்.

இதுபோன்ற உண்மையொளி என்னுள்ளத்தே தோன்ற அருள்செய்தவர் ஐயா அவர்களே என்பதை எப்படி என்னால் மறக்கமுடியும்.

1989-ம் ஆண்டு ஐயா அவர்கள் தம் சொந்த இருப்பிடமான தண்டையார்பேட்டை வீட்டில் தங்க நேரிட்டபோது எங்கள் சந்திப்பில் தடையேற்பட்டது. நான் மேற்பார்வையிடும் தொழிற்சாலையும் திருவான்மியூரிலிருந்து சற்று தொலைவான இடத்தில் அமைந்திருப்பதாலும் பயிற்சியை இடையறாது தொடரும் வாய்ப்பு குன்றியது. இருப்பினும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஐயாவின் இல்லத்தில் சென்று சந்திப்பேன்.

சந்திப்பில் நீண்ட இடைவெளியேற்பட்டால், 'நிறைநாட் செல்வன் கனகசபைக்கு' என்ற நல்லாசியின் தொடக்கத்துடன் எழுதப்பட்ட திருமுகம் ஐயாவிடமிருந்து வரும்.

இது ஐயாவை நேரிற் சந்திப்பது போன்ற நிறைவை ஏற்படுத்தும் எனக்கு.

இப்படி ஐயா அவர்கள் தமிழோடு அன்பையும், பண்பையும்கூட கற்றுத்தந்தார் என்றால், அதுதான் பொருத்தமானதாக இருக்கும்

இப்படி இலக்கியத்தைக் கற்பித்ததோடு இலக்கணப் பாடத்தையும் ஐயா எனக்குக் கற்பித்தார் என ஏற்கெனவே கூறியுள்ளேன். அப்பயிற்சியின் மூலம் நான் பெற்றுள்ள பயன் என்னவென்பதை அறிய விரும்பினார் அவர்.

''எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, எதுகை மோனை எனும் யாப்பிலக்கணப் பயிற்சியைப் பெற்றதனால் கவிதையை இயற்றவும் உன்னால் முடியும்; முயற்சிசெய். இவற்றுள் ஏதாவது குறைந்தாலும் அதைச் செந்தொடை என்று வரவேற்கிறது நம் தமிழ்'' என்று எனக்கு அடிக்கடி நம்பிக்கை ஊட்டுவார்.

அம்முயற்சியில் ஈடுபடும் அவாவும் எனக்குண்டு.

தமிழ்கற்க வருபவர்களிடம் தன்னலங் கருதாது தமிழ்ச் செல்வத்தை அள்ளி அள்ளி வழங்கும் ஐயா அவர்கள் பெற்றிருக்கும் அனுபவத்தையும் ஞானத்தையும் எண்ணிப் பார்க்கிறேன்.

அளந்தறிய முடியாத ஞானப் பெருங்கடல்; அதில் நான் பெற்றவை சில முத்துக்களே. எனினும் அவை விலை மதிக்கமுடியாத வெண்முத்துக்கள்; ஒண் முத்துக்கள்.

இன்னும் ஐயா அவர்களைப்பற்றி என விழைவு என்னவென்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன்;

பொன்னான வரலாற்றின் புகழ்மணக்கும் நாயகனும்
என்னுசான் மாவித்வான் இனியதமிழ் மொழிவேந்தன்
எந்நாளும் நலம்கொழித்து இன்பமுற வாழ்ந்திருக்க
பொன்னம் பலத்தானைப் போற்றி வணங்குகின்றேன்.

★

அச்சிட்டோர் : முத்தமிழ் அரசி அச்சகம், சென்னை-2.

இந்நூலின் வரலாற்று நாயகன்
வித்துவான் **ம. மாசிலாமணி கிராமணி** அவர்கள் இயற்றிய

# சென்னைத் தொண்டை மண்டல சான்றோர் தருமபரிபாலன சபை வரலாறு

★ இது சபையின் வரலாறு மட்டுமல்ல,
சமூகத்தின் வரலாறும்கூட,............எப்படி?

★ சபை என்றால் என்ன?

★ சபை தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம், காலம்.

★ சமூகத்தாரால் ஏற்படுத்தப்பட்ட தருமச் சொத்துக்கள்.

★ அவற்றிற்கு நேர்ந்த உற்பாதங்கள். யாரால்? எப்படி?

★ "எங்கே....?எங்கே....?" என்ற கேள்வித் தலைப்போடு எழுதப்பட்ட கட்டுரையின் விளைவு

★ இழந்த தரும சொத்துக்களை மீட்கும் முயற்சி

★ அறம் செய்வதில் சான்றோர் சமூகத்து பெண்மணிகளுக்கு இருந்த ஆர்வம்,
அத்தனையும் அற்புதமாக படம் பிடித்துக் காட்டுகிறார் இந்நூலாசிரியர்.

வெளியீடு :

**சென்னைத் தொண்டை மண்டலச் சான்றோர் தருமபரிபாலன சபை,**

47, கந்தசாமி கோயில் தெரு, குயப்பேட்டை
சென்னை-600 012